Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா   செய்தி: 021 493 0000   விளம்பரம்: 021 493 1111

சுடர் :35   கதிர் :87   மாசி 12ஆம் நாள் திங்கட்கிழமை   24 பெப்ரவரி 2020   வள்ளுவர் ஆண்டு 2051



**முச்சந்தி முரளி**

"இப்பிடி கொத்துக் கொத்தா பலி கொடுக்கிறதே இங்கே வாடிக்கையாகிப் போச்சு பாருங்கோ...!"



## ஓமந்தையில் இ.போ.ச. டிப்பெண்டர் மோதி-

# கோர விபத்து 6 பேர் சாவு!

- எரியூட்டப்பட்டது பஸ்
- கருகிய நிலையில் இரு சடலங்கள்
- எரியூட்டிய சந்தேகத்தில் இருவர் கைது

**வவுனியா, பெப்ரவரி 24**

**ஏ-9 வீதியில், வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்த குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற அகோர விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். 23 பேர் காயமடைந்தனர். அவர்களில் மூன்று பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்குச் சொந்தமான பேருந்தும், டிப்பெண்டர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தையடுத்து இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துக்கு தீ வைக்கப்பட்டது. அந்தத் தீ டிப்பெண்டர் வாகனத்துக்கும் பரவியது. நீண்ட போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.**

23

## கேதீச்சரத்தில் திருடியவர்கள் யாழ்ப்பாணத்தில் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப். 24

மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு

23

## விலகுவதால் பாதிப்பில்லை

*அரசு சொல்கின்றது*

கொழும்பு, பெப். 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களிலிருந்து அரசு விலகு

23

## மாமனிதர் ரவிராஜின் மனைவியும் தேர்தலில்!

கிளிநொச்சி, பெப். 24

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

23

## தமிழ் அரசுக் கட்சி எம்.பிக்களுக்கு மீண்டும் வாய்ப்பு

கிளிநொச்சி, பெப். 24

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தற்போது உள்ளவர்கள், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கைத்

23

## விபத்தில் சிக்கிய வயோதிபர் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 24

விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார். புத்தூர் வடக்கு புத்தூரைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான

23

## சம்பந்தன், மாவை. தேர்தலில் போட்டி

கிளிநொச்சி, பெப். 24

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்திலும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராசா யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடவுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் அதன் பின்னர் இடம்பெற்ற வேட்பா

23

## நாங்கள் சொல்வதைத்தான் சர்வதேசம் கேட்க வேண்டும்

### ஒப்பந்தத்தின்போது பான் கீ மூனுடன் தெரிவித்தேன் என்கிறார் மஹிந்த

கொழும்பு, பெப். 24

2009ஆம் ஆண்டு மே மாதம் இறுதிப்போர் முடிவடைந்தவுடன் பொறுப்புக்கூறலை முன்னிலைப்படுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலர் பான் கீ மூனுடன் இலங்கை

05

### மியன்மாரைப் போன்று

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்தவே முடியாது

*அடித்துக் கூறுகின்றார் வெளிவிவகார அமைச்சர்*

கொழும்பு, பெப். 24

மியன்மாரைப் போல் இலங்கையில் மனித உரிமை மீறல்களோ அல்லது போர்க் குற்றங்களோ இடம்பெறவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்

05

## ஹம்பாந்தோட்டைக்கு அதிவேகப் பாதை

### நேற்றுத் திறந்துவைப்பு

23



# நான் 'டீலர்' இல்லை 'லீடர்'

## மனோ பஞ்ச்

கொழும்பு, பெப். 24

சின்னத்தை மாத்திரம் கண்டு, கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பவர்கள், மலையக மக்கள் எனக்கூறி அந்த மக்களை அவமானப்படுத்த வேண்டாம். கடந்த காலங்களில் அவர்கள் எத்தனையோ சின்னங்களுக்கு சிந்தித்து வாக்களித்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில் நகர மக்களை விட அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். சிலருக்கு யானை சின்னம் வேண்டும் என்பதற்காக மலையக மக்களை இதில் இழுக்க முயல்கிறார்கள். மலையக மக்களை அவமானப்படுத்தி என் கோபத்தை கிளற வேண்டாம். எனக்கு வெறுப்பேற்றினால் நான் சும்மா இருக்க மாட்டேன். இது உங்களுக்கு தெரியும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சின்னம் ஒரு பிரச்சினை இல்லை. அது 'டீலர்' களின் பிரச்சினை. நான் 'டீலர்' இல்லை. நான் ஒரு 'லீடர்'. எங்களை பொறுத்தவரையில், யானை கிடைத்தால் நல்லது. அன்னம் கிடைத்தாலும் நல்லது. எமது கூட்டணிக்கு யானையை தர யார் மறுக்கிறார்கள் என்று தேடி பாருங்கள். அப்போது உரிய விடை கிடைக்கும். இவர்களது நோக்கம் இப்படி எதையாவது சொல்லி, எமது கூட்டணி அமைவதை தாமதம் செய்வது ஆகும். இந்த தந்திரம் எம்மிடம் இந்த முறை பலிக்காது. இன்னும் இரண்டு தினங்களில் நாம் எமது கூட்டணி அமைவதை அதிகாரபூர்வமாக நாம் அறிவிப்போம்.

யானை இருந்தால் தான் கூட்டணி அமைக்க முடியும் என்று கூறுபவர்கள் அதை எமக்கு தர வேண்டும். தரவும் மாட்டீர்கள். யானை என்று ஓலம் இட்டுக்கொண்டும் இருப்பீர்கள். அப்புறம் அன்னம் என்பீர்கள் அதையும் இழுத்தடிப்பீர்கள்.

போதாதற்கு யானைக்கு மாத்திரமே மலையக மக்கள் வாக்களிப்பார்கள் என கூறி என்னை வெறுப்பேற்றாதீர்கள். சின்னத்தைச் சொல்லி, சொல்லி, காட்டி, காட்டி, இழுத்தடிப்பது, ஆளுகின்ற அரசுடன் போடப்படும் 'டீல்'. ஆட்சிக்கு வந்த 100 நாள்களுக்குள்ளேயே சாயம் வெளுத்து வரும் இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று தரும் 'டீல்'. இந்த உண்மையை வெளியே சொன்னால், உங்களுக்கு என் மீது கோபம் வருகிறது. உங்களை போன்ற 'டீலர்'களுக்கு மசிகின்றவன் நானல்ல. உங்கள் 'டீல்'களை அப்படியே ஏற்றுக்கொள்ள நான் ஒரு 'டீலர்' இல்லை. நான் ஒரு 'லீடர்'. இதை மறக்க வேண்டாம் - என்றார். (ஒ.5)



# கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

கிளிநொச்சி, பெப்.24

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேசத்திலுள்ள கொல்லக்குறிச்சி கிராம மக்களை நேற்றுக்காலை சந்தித்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைம் வழங்கினார். (ப)

# நாடாளுமன்றத் தேர்தல் குருஷேத்திரப் போர்

## கூறுகிறார் சிறீதரன் எம்.பி.

பளை, பெப். 24

தமிழர்களை பல கூறுகளாக்கி தமிழர்கள் அரசையே தங்கி நிற்கும் நிலையை உருவாக்க இலங்கை அரசு முனைகிறது. இவை எல்லாம் விடுதலை வேண்டி நிற்கும் தமிழ்த் தேசிய இனத்துக்கு ஆரோக்கியமானது அல்ல. எதிர்வரும் தேர்தல் தமிழர்களுக்கு குருஷேஸ்திர போராகவே அமையும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் பச்சிலை சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களிடத்தில் பல கட்சிகள் தற்போது தோற்றம் பெற்றிருக்கின்றன. முன்னணி என்றவாறும் கூட்டணிகளாகவும் உருவாக்கி உடைந்து நின்று ஒற்றுமை அற்றவர்களாக இலங்கை அரசின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள தமிழ்க் கட்சிகளே துணை நிற்கிறன. தற்போது உருவாகியுள்ள முன்னோடிகளாக இருக்கட்டும் கூட்டணிகளாக இருக்கட்டும் இவர்களின் உருவாக்கத்துக்குப் பின்னால் இலங்கை அரசே இருக்கிறது.

1980ஆம் ஆண்டுகளில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலத்தில் பல ஆயுதக் குழுக்கள் உருவாக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய ஆயுதக் குழுக்கள் அனைத்தும் அரசுகளை தங்கியே நிற்க வேண்டிய நிலை இருந்தது. அதே போலவே இப்போதும் தமிழர்களை பல கூறுகளாக்கி தமிழர்கள் அரசையே தங்கி நிற்கும் நிலையை உருவாக்க இலங்கை அரசு முனைகிறது. இவை எல்லாம் விடுதலை வேண்டி நிற்கும் தமிழ்த் தேசிய இனத்துக்கு ஆரோக்கியமானது அல்ல. பயங்கர அழிவுகளைத் தரும் ஆபத்தான விடயம் - என்றார். (ஒ.5,6)

# தமிழில் தவறுகள் இனி வரக்கூடாது

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு



கிளிநொச்சி, பெப். 24

எமது பேச்சு வழக்கில் தமிழ் மறந்து பிற மொழிகள் நுழைந்து விட்டன. இனிவரும் காலங்களிலாவது தமிழில் தவறுகள் நடக்காதிருக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச்செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உலக தாய் மொழி தினம் கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மருத்துவர் மா.ஜெயராசா தலைமையில் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது பேச்சு வழக்கில் தமிழ் மறந்து பிற மொழிகள் நுழைந்து விட்டன. சில அரச அலுவலர்கள் கூட இப்படியான தவறுகளை விடுகின்றனர். இனி வரும் காலங்களிலாவது தமிழில் தவறுகள் நடக்காதிருக்க வேண்டும். தமிழ் மொழியை வளர்க்கவேண்டும். பிற மொழிகளை மதிக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராயன், மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி மு.முத்துக்குமரன், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஆணையர் எம்.மாதவன், புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் எம். அன்ரனிசாந்தா, சிறுவர் இல்லத் தலைவர் பொன். நித்தியானந்தம் மற்றும் சிறுவர் இல்லச் சிறுவர்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (து)

# பாதிப்பில்லாத வகையில் இடமாற்றல் செய்யுங்கள்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ். கல்வி வலயச் செயலர் கோரிக்கை

கொழும்பு, பெப்.24

யாழ்ப்பாணம் வலயத்தில் ஏழு ஆண்டுகளை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான 2020ஆம் ஆண்டுக்கான இடமாற்றமானது பாடசாலைகளில் நிலவும் பாடரீதியான ஆளணிக்கு ஏற்பட்ட இடமாற்ற சபை ஊடாக நடைபெற்றது. ஆனால் இடம்மாற்றம் வழங்கப்பட்ட பாடசாலைகளில் இன்னமும் சிலர் தங்கள் கடமைகளை ஏற்காது இருப்பது வருத்தத்துக்குரியது.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ்ப்பாணம் கல்வி வலயச் செயலர் ஜெ.வோல்வின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் வழங்கப்பட்ட பாடசாலைகளுக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர், அந்தத் திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் மேன்முறையீடு செய்ய வேண்டும் என்று நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சிலர் இடமாற்றம் வழங்கப்பட்ட பாடசாலைகளில் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்காதுள்ளனர்.

அவர்கள் மீது எந்த நடவடிக்கைகளும் வலயக் கல்விப் பணிப்பாளரால் எடுக்கப் படவில்லை. இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களில் பலர் சிரமங்களின் மத்தியிலும் வழங்கப்பட்ட பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். அவர்கள் கடமை நிலமைகளுக்கு ஏற்ப மேன்முறையீட்டுக் கடிதங்களை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கியுள்ளனர்.

ஆனால் மேன்முறையீட்டுச் சபையைக் கூட்டாமல் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றங்களை வழங்கி வருகின்றனர். இந்த இடமாற்றங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன என்று தெரியவில்லை. இடமாற்ற சபையைக் கூட்டாது செயற்படுவது கவலை தருகின்றது. தற்போதுவரை இடமாற்றக் கடிதங்கள் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மேன்முறையீட்டுக்கு அமையக் கடிதங்கள் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்ட பாடசாலையில் கடமைகளை ஏற்கச் சென்றபோது அதிபர்கள் மேலதிக ஆளணி என்று கூறி கடமைகளை வழங்க மறுத்துள்ளனர். ஆசிரியர் ஆளணி தொடர்பாக சரியான விவரங்களை வலயக் கல்விப் பணிமனை பேணவில்லை என்று தெளிவாகின்றது.

மேன்முறையீட்டு இடமாற்ற சபையைக் கூட்டி ஆசிரியர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இடமாற்றங்களை வழங்க வேண்டும் என்று எமது சங்கத்தின் சார்பாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ளோம். என்றார். (எ)



## விமலின் நாடாளுமன்ற வாழ்வுக்கு 20 வருடமாம்

கொழும்பு, பெப். 24
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்சவின் நாடாளுமன்ற வாழ்வின் 20 வருடப் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதிகளாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
'20 வருட வீரவன்ச' எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் விமல் வீரவன்சவின் அரசியல் வாழ்க்கை பற்றி இசுறு பிரசங்கவினால் எழுதப்பட்ட 'விமல் யுகங்களின் பங்கு' எனும் நூல் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்தல், அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லல் மற்றும் நாட்டின் மதிப்புக்காக முன்னிற்றல் போன்ற விடயங்களில் தான் மற்றும் வீரவன்ச முகம் கொடுத்த சவால்கள், பிரச்சினைகள் பற்றி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் முன்னிலையில் நினைவு கூர்ந்தார்.

கோத்தாபய ராஜபக்ஷ பெரும்பான்மை விருப்பத்தின் பேரில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் வரையிலான செயற்பாட்டில் தடைகளை வெற்றிகொண்டு கடந்து வந்த பாதையில் ஒரு பலமான சக்தியாக விமல் வீரவன்ச இருந்தார் எனப் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ச, நாடு அரசை இழக்கும் ஆபத்துக்குள்ளான சந்தர்ப்பத்திலேயே கோத்தாபயவை நாட்டின் தலைவராக்க முடிந்தது எனத் தெரிவித்தார், என்றுள்ளது.

(ஒ.5,22)

### ஐ.நா தீர்மான விவகாரம்

# அரசுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

### சூளுரைக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 24
தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை அரசு வெளியேறிய ஐ.நா தீர்மானம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமோ இல்லையோ, எமது கட்சி மற்றும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களால் இந்த விடயம் தொடர்பில் அடுத்த கட்ட நகர்வுகளை எடுக்க முடியும் இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஷ்பிரேமசந்திரன்.



யாழ்ப்பாணத்தில் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த நான்கு வருடங்களாக ஜெனிவா தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது தொடர்பான தீர்மானத்தில் எந்த முன்னேற்றம் ஏற்படவில்லை. ஐ.நா தீர்மானம் தொடர்பில் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்பது தெரியும். இதனால்தான் சர்வதேச விசாரணை வேண்டும், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் மற்றும் புலம் பெயர் தமிழர்கள் வலியுறுத்தி இருந்தனர்.

இந்த விடயத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பால் பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்ல முடியாது. குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றால் பாதுகாப்பு சபையில் எதிர்க்கப்படும். அதை விடுத்து இலங்கையை ஐநா கண்காணிப்பகத்தில் வைத்திருக்க வேண்டும் என்று முன்னர் கூறினார்கள். இலங்கை அரசு தீர்மானத்தில் இருந்து வெளியேறி விட்ட நிலையில் இலங்கை தொடர்பான விடயத்தை பாதுகாப்புச் சபைக்குக் கொண்டுசெல்லப்போகின்றாம் என்றும் குற்றவியல் நீதிமன்றில் இலங்கை நிறுத்தப்படும் என்றும் தற்போது சொல்கின்றார்கள். முதலில் முடியாது என்றார்கள் தற்போது முடியும் என்கின்றார்கள். அவர்களால் இது முடியுமோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் எங்களால் மற்றும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களால் இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார்.

(ம-7)

## கேதீச்சரத்துக்கு இணையத்தளம்

மன்னார், பெப். 24
வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கேதீச்சரத்துக்கு உதியோகபூர்வ இணையத்தளம் மஹாசிவராத்திரி தினமான கடந்த வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.
திருக்கேதீச்சர கோவில் திருப்பணிச்சபையினரால் www.ketheeswaram.com இந்த இணையத்தள முகவரி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் இணைச் செயலாளர் எஸ். இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.
திருக்கேதீச்சரத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி இந்த இணையத்தளத்தின் மூலம் அன்பளிப்புகள், ஆலயத்தின் கட்டளைப் பூசைகள், அர்ச்சனை பற்றுச் சிட்டைகள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மேலும் தெரிவித்தார்.

(து-213)



## நாட்டின் வறுமைக்குக் காரணம் ஆட்சிமாறும் கொள்ளையர்களே

### சொல்கிறது ஜே.வி.பி.



வவுனியா, பெப்.24
"இலங்கையின் வறுமை நிலைக்கு 72 வருடங்களாக ஆட்சியாளர்களாக இருந்த கொள்ளையர்களே காரணம்" என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.
வவுனியாவில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட மாநாட்டு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் சகல மக்களும் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வதற்கும் தங்கள் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்கும் மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி தாங்கள் ஆட்சிப் பீடமேறி குபேரர்களாக மாறி நாட்டை இலஞ்சம் ஊழலில் கொடிகட்டிப் பறக்கவிட்டார்களே தவிர வேறு எதனையும் செய்யவில்லை.
பிணைமுறி மோசடியில் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமல்ல ராஜபக்ஷ குடும்பத்தினரும் ஈடுபட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. ஆயிரத்தி நூறு கோடி ரூபாவைக் கொள்ளையடிப்பதற்கு ராஜபக்ஷ அரசு ஆதரவு வழங்கியுள்ளது. ஆகவே அப்போது மத்திய வங்கி ஆளுநராக இருந்த அஜித் நிவாட் கப்ராலும் அவருடைய சகோதரிகளும் நாட்டின் சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் பாவிகளாக மாறியிருக்கின்றனர். இந்த கொள்ளைக்கூட்டமே எமது நாட்டை இந்த வறுமை நிலைக்குத் தள்ளிய பாவிகள் - என்றார்.

(து-110)

## சட்டவிரோத வெடிபொருள் பாவனை கட்டுப்பாட்டுக்குள்

### நடவடிக்கை எடுப்பேன் என்கிறார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

முல்லைத்தீவு, பெப். 24
புதுக்குடியிருப்பு தேராவில் பிரதேசத்தில் சட்டவிரோத வெடிபொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.அமரசிங்க தெரி வித்தார்.
கடந்த 14ஆம் திகதி மாடு பார்ப்பதற்கு காட்டுப் பகுதிக்குச் சென்ற சகோதரர்கள், சட்டவிரோத கட்டுத்துப்பாக்கி வெடித்துக் காயமடைந்தனர். சட்டவிரோத கட்டுத்துப்பாக்கி கட்டும் நபரை மக்கள் அடையாளம் காட்டியுள்ளனர். அவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.
'25 ஏக்கர் வரையான காணிகள் தேராவிலில் பற்றைக் காடாகக் காணப்படுகின்றன. காணியின் உரிமையாளர்கள் வெளி மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் காணிகளில் காட்டு மிருகங்கள் அருகில் உள்ள பெருங் காடுகள் ஊடாக வெற்றுக் காணிகளுக்கு மேச்சலுக்கு வருகின்றன. இதனை சட்டவிரோத கட்டுத்துவக்குப் பய்ன்படுத்தி வேட்டையாடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை' என்று தோரவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தியாகு தெரிவித்துள்ளார்.
புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் இது தொடர்பில் கேட்டபோது, சட்டவிரோத வெடிபொருள் பயன்படுத்துனருக்கு எதிராக நீதிமன்றில் தண்டனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சட்டவிரோத வெடிபொருள் பாவனையாளர்கள் தொடர்பில் மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினால் அது தொடர்பில் சட்டநவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ.5,19)

# இனவாதப் பிடிக்குள் சிக்கியுள்ளது அரசு!

## சாய்ந்தமருது நகர சபை விவகாரம் எடுத்துக் காட்டு என்கிறார் இம்ரான் எம்.பி



**கொழும்பு, பெப்.24**

**இனவாதப் பிடியில் இருந்து இந்த அரசால் மீள முடியாது என்பது சாய்ந்தமருது நகரசபை விடயத்தில் உறுதியாகியுள்ளது என நாடாளுமன்றஉறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சாய்ந்தமருது நகர சபை விடயத்தில் இந்த அரசால் அந்தப் பிரதேச மக்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவர்களின் நீண்ட காலக் கோரிக்கையான தனியான நகரசபையை வழங்குவதாக வர்த்தமானி வெளியிட்டபின் அந்த வர்த்தமானியை இரத்துச் செய்வதாக கூறுவது இந்த அரசு இனவாத நிகழ்ச்சிநிரலை தாண்டிச் செயற்படாது என்பதுக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

இந்த அரசு கேட்பதைப் போல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ ஆட்சி அமைக்க தேவையான பெரும்பான்மையோ கிடைத்தால் சிறுபான்மையிருக்கு அந்த அரசில் என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

எமது அரசின் காலத்திலும் நுவரேலியாவில் புதிதாக ஆறு சபைகளை உருவாக்கினோம். அப்பொழுதும் எமக்கு இனவாதிகளிடம் இருந்து அழுத்தங்கள் வந்தன. அதற்காக நாங்கள் அதை மீளப்பெறவில்லை. அதேபோன்று எமது அரசும் சாய்ந்தமருது விடயத்தில் நூறு வீதம்சரியாகநடந்துகொள்ளவில்லை என்பதே எனது நிலைப்பாடு.

சாய்ந்தமருதுக்கு தனியான நகர சபை வழங்கும்போது கல்முனை நகருக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் சிறந்த தீர்வொன்றை பெறவே அன்றைய எமது அரசு முயற்சி செய்து அதற்கான எல்லை பிரிப்பையும் செய்தது. அதை வர்த்தமானியில் அறிவிக்கக் காலம் தாழ்த்தியமையே எமது அரசு விட்ட தவறு.

இந்த நகரசபை விடயத்தில் கடந்த சில நாள்களாக ஒரு சில ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் கண்டிக்கத்தக்கன. இது தொடர்பான உண்மைத்தன்மையை அவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். எதிர்காலங்களில் இவ்வாறான கருத்துக்களை அவர்கள் வெளியிடமாட்டார்கள் என நம்புகிறேன். என்றார். (எ)

# மாவட்டச் செயலரின் தரவு பச்சைப் பொய்

## சத்தியலிங்கம் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், பெப். 24

வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் பிடியில் 3 ஆயிரத்து 190 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாக மாவட்டச் செயலர் தெரிவித்த தகவல் தவறானது என்று தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளைத் தலைவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் செயற்படும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் கடந்த 20ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

அதில், இரு திணைக்களங்களின் அமைச்சர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளும், மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியா மாவட்டம் சார்பில் வனவளத் திணைக்களத்திடம் 3 ஆயிரத்து 190 ஏக்கர் நிலம் உள்ளது என்றும், இவை மக்களின் பயன்பாட்டுக்குரிய நிலம் என்ற வகையில் இதனை நம்பி வாழும் மக்களிடமே அந்த நிலத்தை மீள வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

உண்மையில், வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் மெனிக்பாம் என்ற பெயரில் 2009ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இடைத்தங்கல் முகாம் அமைந்த இடம் மாணிக்கம்பண்ணை. இது 1978 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டது. அந்த நிலத்தின் உரிமையாளர்களில் சிலர் இங்கும், அதிகமானோர் இந்தியாவிலும் வசிக்கின்றனர். அந்த நிலத்தின் அளவு மட்டும் 6 ஆயிரத்து 300 ஏக்கர்.

இதைப் படையினர் விடுவித்தாலும் வனவளத் திணைக்களம் தனது ஆளுகை நிலம் என்ற பெயரில் ஆக்கிரமித்துள்ளது. இந்த மாவட்டம் முழுமையாக 3 ஆயிரத்து 190 ஏக்கர் நிலம் மட்டுமே வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளதாகக் குறிப்பிடப்படுவது பச்சைப் பொய்.- என்றார். (த-105)

# அதிபர் நியமனத்தால் ஆசிரியர் பற்றாக்குறை?

யாழ்ப்பாணம், பெப். 24

வடக்கு மாகாணத்தில் புதிதாக அதிபர் நியமனம் கிடைத்த 80 பேரில் 69 பேர் கணிதம் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்கள் என்பதனால், குறித்த இரு பாடங்கள் தொடர்பிலும் ஆசிரியர்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

புதிதாக அதிபர்களைத் தெரிவுசெய்யவென்று நடத்திய போட்டிப் பரீட்சையில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் சார் கேள்விகள் அதிகமாகக் காணப்பட்டன என்றும், இதனால் இந்த இரு பாடங்களின் ஆசிரியர்களே அந்தப் பரீட்சையில் அதிகளவில் சித்தியடையும் வாய்ப்புக் காணப்படுகின்றது என்றும் முன்னரே தெரிவிக்கப்பட்டது என்றும் ஆசிரியர்கள் கூறுகின்றனர். (த-105)



# 20 லட்சம் ரூபாவில் திருத்தப்பட்ட வீதியைத் திறந்தார் சரா எம்.பி.



யாழ்ப்பாணம், பெப்.24

யாழ்ப்பாணம், கிளிநொச்சி. மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் விசேட நிதி ஒதுக்கீடான 20 லட்சம் ரூபா நிதியில் சீரமைக்கப்பட்ட மட்டுவில் தெற்கு இலுப்பையடி இணைப்பு வீதி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை திறந்துவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், மட்டுவில் தெற்கு கலைவாணி சனசமூக நிலைய உறுப்பினர்கள் இணைந்து நாடா வெட்டி அந்த வீதியைத் திறந்து வைத்தனர். பலரும் பயன்படுத்தும் முக்கிய வீதியாகக் காணப்பட்ட அந்த வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவு மோசமாகக் காணப்பட்டதன் காரணமாக அந்தப் பகுதி மக்களின் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினரின் விசேட நிதியில் அந்த வீதி சீரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)




ஆசிரியருக்கான கடிதம்

# பேராசிரியர் சொல்வதே சரி!

உதயன் பத்திரிகையில் ந.பரமேஸ்வரனும் யாழ் பல்கலைக்கழக தமிழ் துறை தலைவர் இரகுநாதனும் நடத்திய சொற்போரைத் தொடர்ந்து படித்தேன். பேராசிரியர் சொல்வது தான் சரி, யாழ் பல்கலைக்கழக தமிழ் துறை தலைவரை பரமேஸ்வரன் வேண்டுமென்றே அவமானப்படுத்துகிறார்.

அனைத்துலக தமிழ் மகாநாடு என்று எழுதுவதில் எந்தவிதத் தவறுமில்லை.பேராசிரியரைப்பற்றி விமர்சிப்பதற்கு பரமேஸ்வரனுக்கு என்ன தகுதி இருக்கிறது. பரமேஸ்வரன் எந்தப் பல்கலைக்கழகத்தில் கற்றார் பேராசிரியரைப்பற்றி விமர்சிப்பதற்கு. எனக்கு பரமேஸ்வரனை நன்கு தெரியும். அவர் ஒரு எட்டாங் கிளாஸ். சில தினங்களுக்கு முன் உதயன் பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது உலக திருக்குறள் மகாநாடு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளதாக; பேராசிரியர் சுட்டிக்காட்டிய பின்பும் உதயன் அதே தவறை தொடர்ந்து விடலாமா? அனைத்துலக திருக்குறள் மகாநாடு என்று இனியாவது உங்களது பத்திரிகையில் எழுதுங்கள்.

மதுரை தமிழ்ச்சங்கத்தில் இருப்பவர்களுக்கு கூட ஒழுங்கான தமிழ் தெரியாததால் உலக தமிழ்ச்சங்கம் என எழுதியுள்ளார்கள். மதுரை தமிழ்ச்சங்கமும் இனிமேல் அனைத்துலக தமிழ்ச்சங்கம் என்று தமது பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும்.

-கம்பதாசன்.



# மல்லாகத்தில் பேருந்துக்கு கல் வீச்சு

யாழ்ப்பாணம், பெப். 24
மல்லாகம் பகுதியில் நேற்று இரவு பேருந்து மீது கல்லெறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
மல்லாகத்திலிருந்து கொழும்புக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பேருந்தின் மீது கல்லெறிந்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (ஒ,5,105)

## twitter

செந்திலின்_கிறுக்கல்கள்
நினைக்க மறந்தாலும் மறக்க நினைக்காதே..! கல்யாணத் திகதி

டொய்ங் @prakasht_
கனவுகள் கட்டிய தேன் கூட்டில் கல்லெறிந்து கொண்டே இருக்கிறது விதி

ச ப் பா ணி @manipmp
தைலம் போட்டிருப்பவர் அடுத்தவர் கேட்காமலேயே கொடுக்கிறார் தலைவலியை

ஜோக்கர்... @ItsJokker
"மனைவி" மட்டுமல்ல,
"சலூன் கடைக்காரரும்"
"டெய்லரும்"அமைவதும் கூட இறைவன்
கொடுத்த வரம்தான்..!!!

காட்டுப்பயல் @sundartsp
சில பிரபலங்கள் எளிமையாக இருப்பதைக் காட்ட நிறைய செலவு செய்கிறார்கள்

செங்காந்தள் @kumarfaculty
மக்களை கஞ்சனாகவோ, சிக்கனவாதியாகவோ அல்லது திருடனாகவோ மாற்றி விடுகிறது விலைவாசி...!!!

# பஸ்— மோ.சைக்கிள் விபத்து இருவர் ஸ்தலத்தில் சாவு!

பொலநறுவை, பெப்.24
பொலநறுவையில் தனியார் பேருந்து ஒன்றும்,மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இருவர் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் பொலநறுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
. சம்பவ இடத்துக்கு சென்ற பொலநறுவைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந)







# 'பாகுபலி' ட்ரம்ப்

பாகுபலி படம்தான். ஆனால், இதில் நடிகர் பிரபாஸ் இல்லை. இதில் இருப்பது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப். ட்விட்டரில் இவ்வாறு வெளியிடப்பட்ட காணொளியை 'ரீட்வீட்' செய்துள்ள அதிபர் டிரம்ப், இந்தியா வருவதற்கு ஆவலுடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.




## வெற்றி மொழி

- செயற்படாத மனிதனின் சிந்தனை பயனற்றது; சிந்திக்காத மனிதனின் செயற்பாடு ஆபத்தானது.
- தோற்கடிக்கப்படும்போது ஒருவரது செயல் முடிவுறுவதில்லை. அவர் அதிலிருந்து வெளியேறும்போதே முடிவுபெறுகிறது.
- நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், எப்பொழுதும் உங்களுடைய சிறந்ததை செய்யுங்கள். ஒருபோதும் சோர்வுடையாதீர்கள்.
- வாடிக்கையாளர் எதைக் கேட்டா லும் ஒருபோதும் இல்லை என்று சொல்லாதீர்கள், அது நிலவாக இருந்தாலும்கூட.
- # மற்றவர்கள் உங்களை வெறுக்கலாம். ஆனால் உங்களை வெறுப்பவர்களை நீங்கள் வெறுக்காதவரை அவர்கள் வெற்றிபெறப் போவதில்லை.
- உங்கள் கோபம் ஆழமாகவும் வலுவாகவும் இருந்தால், அந்த மனோபாவத்தை சிறப்பான முறையில் மாற்றிக்கொள்ள முடியும் என் பதை நீங்கள் கற்றுக் கொள்கிறீர்கள்.
- தீர்வுகள் என்பவை பதில் ஆகாது.
- # ஒன்றுக்குப் பிறகான மற்றொரு நெருக்கடியே வாழ்க்கை.

## நாங்கள்...

அரசு கூட்டு ஒப்பந்தம் செய்தமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இந்த ஒப்பந்தத்தின்போது நாங்கள் (இலங்கை அரசு) சொல்லும் விடயங்களைத்தான் சர்வதேசம் கேட்க வேண்டும் எனவும், நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் சர்வதேசம் நடவடிக்கைகளை எடுக்க முடியாது எனவும் பான் கீ மூனுக்கு தெரிவித்திருந்தேன். இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ.
'2015ஆம் ஆண்டுவரை நாம் ஆட்சியில் இருக்கும்வரைக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாம் ஆதரிக்கவில்லை. அதேவேளை, எமக்கு எதிராக சர்வதேசம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், 2015ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து 2019ஆம் ஆண்டு வரைக்கும் இலங்கை மீதான ஐ.நாவின் இரண்டு தீர்மானங்களுக்கு 'நல்லாட்சி' என்ற பெயரில் இயங்கிய ரணில் அரசு ஆதரவு வழங்கியுள்ளது. இதனால்தான் எமது நாடு சர்வதேச வலைக்குள் சிக்கியது' எனவும் அவர் குறிப்பிட்டார்.
'இந்த ஆபத்திலிருந்து மீளவே ஐ. நாவின் 30/01 மற்றும் 40/01 ஆகிய தீர்மானங்களுக்கான இணை அனுசரணையில் இருந்து வெளியேறுகின்றோம். இவ்வாறு நாம் செய்வதால் நாட்டுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
'போரின்போது குற்றங்கள் இழைக்கப்பட்டிருந்தால் அவை தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும். அந்த நடவடிக்கையும் உள்நாட்டுசட்டதிட்டங்களுக்கு அமையவே இருக்க வேண்டும். வெளிநாடுகள் இதில் தலையிட முடியாது' எனவும் மஹிந்த தெரிவித்தார்.
போர் முடிவடைந்த பின்னர் அப்போதைய ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுடன் இணைந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தமே இலங்கை விவகாரத்தை சர்வதேச மயப்படுத்தியதுடன், நாடும் சர்வதேச பொறிக்குள் சிக்க வேண்டி வந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம்சாட்டி வருகின்றமை தொடர்பில்கருத்துத் தெரிவிக்கும்போதே மஹிந்த இப்படித் தெரிவித்தார். (ஒ-5-22)

## சர்வதேச...

றத்தில் நிறுத்தவே முடியாது. இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன.
'இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவது தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தியுள்ளது. மியன்மார் விவகாரத்தில் பின்பற்றப்பட்ட அணுகுமுறைகளை ஒத்த பொறிமுறைகளின் ஊடாக இலங்கையையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவது தொடர்பில் அந்தப் பேச்சில் ஆராயப்பட்டுள்ளது' என்று உதயனில் நேற்று வெளியாகிய செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, ரோம் சட்டத்தில் இலங்கை கையெழுத்திடவில்லை. அதேவேளை, இலங்கை விவகாரத்தை ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்ல எமது நட்பு நாடுகள் ஒருபோதும் இணங்கமாட்டா. அது மட்டுமல்ல ஐ.நா. சபையும் இலங்கை விவகாரத்தை மோசமான வழிக்குக் கொண்டு செல்லாது. இலங்கை தொடர்பான ஐ.நாவின் 30/01, 40/01 தீர்மானங்களுக்கு கடந்த அரசு வழங்கியுள்ள இணை அனுசரணையிலிருந்துதான் நாம் விலகுகின்றோம். ஐ.நாவின் கொள்கைகளுடன் இணைந்து இலங்கை அரசு தொடர்ந்து பயணிக்கும். இதை இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் தெளிவாக எடுத்துரைக்கவுள்ளேன் - என்றார். (ஒ-5-22)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி சோ.சுதர்சினி** அவர்களின் பாசமிகு மாமியாராகிய

**திருமதி நடராசா இராசலட்சுமி**


அவர்கள் 22.02.2020 சனிக்கிழமை இறைபதம் அடைந்தமை யால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**தென்னைப் பயிர்ச்செய்கைச்சபை, யாழ்ப்பாணம்.**

(CS/14473)(11.17)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 17.12.1937



இறப்பு 20.02.2020

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபைப் பொருளாளராகப் பல ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய

**செல்லத்துரை வேலாயுதம்** அவர்கள்

20.02.2020 இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா பர்வதவர்த்தனி அம்பாளின் பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆலயப் பரிபாலன சபையினர்,**
**உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்.**

(in.12662) (13.17)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா பொன்னுத்துரை**

திதி:
பூர்வபக்க பிரதமை
24.02.2020

தோற்றம் 19.05.1945
மறைவு 12.03.2013




ஆண்டு ஏழு ஆனதையா
எம்மைவிட்டு நீர் சென்று
என்றும் எமை விட்டு- உம்
நினைவுகள் அகலாதையா
எம்மை வழிநடத்த
என்றும் ஒளியாய் நீரே ஐயா

விரப்பதிராஜன்
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
17
12
1937



இறப்பு
20
02
2020

**உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபையின் பொருளாளர்**

**செல்லத்துரை வேலாயுதம்**

அவர்கள் இவ்வுலகை நீத்தார் எனும் செய்தி பேரிடியாய் எம் சிரசிறங்க, எமது சபையை வலுவாய் அயராது நேர்த்தியாய் தாங்கி நின்ற பெரும் கோபுரம் சாய்ந்தது என பேரிழப்பாய் உணர; வேதனையால் மிகைப்பட்டு தீக் குழம்பிலிட்ட தேனீக்கள் போல உற்ற உறவுகள் கலங்கி நிற்க; இப் பூவுலகில் அம்பாள் திருவுருவின் பாதம் பணிந்த திறமை மிகு செல்லத்துரை வேலாயுதம் இன்று அம்மையின் மெய்மலர்ப்பதம் சென்று கலந்தார் என ஆறுதலடைவதோடு பல ஆண்டுகள் தன் கடனைப் பொறுப்பாக, திறமையாக, நேர்மையாகக் கறைபடியாக் கரங்கொண்டு நிறைத்திருந்த அன்னாரின் பிரிவால் [illegible]யாது கடும் புயலில் அகப்பட்ட கட்டுமரமென [illegible]கலங்கியிருக்கும் அனைவருக்கும் எமது ஆலய சமூகம் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு ஓய்வின்றி உழைத்திருந்த இம் மாமனிதர் ஆத்மா அம்பாளின் பாதத்திற் சரண்புகுந்து இளைப்பாறிச் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்**
**பரிபாலன சபையினர்,**
**பர்வதவர்த்தனி அம்மன் கோயில், உரும்பிராய்.**

(IN/12661)(11.17

# இலங்கையைத் தப்பவிடாதீர்! மாற்றுவழி உடன் வேண்டும்!!

### ஐ.நாவை வலியுறுத்தி தமிழ் அரசு தீர்மானம்

கிளிநொச்சி, பெப். 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 30/01 மற்றும் 40/01 ஆகிய தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகுவதைக் கண்டித்தும், ஐ.நா. பரிந்துரைகள் மற்றும் தீர்மானத்திலிருந்து இலங்கை விலகினாலும், எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபை வலியுறுத்த வேண்டும் என்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், ஞா.சிறிநேசன், சி.சிறிதரன், எஸ்.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, க.துரைரெட்ணசிங்கம் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் மையக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே ஐ.நா. விவகாரம் தொடர்பில் பேசப்பட்டு மேற்படித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/01 மற்றும் 40/01 ஆகிய தீர்மானங்களை ஏற்றுக் கொண்டு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியுள்ளது. ஆனால், புதிய அரசு பதவியேற்ற பின்னர் அதிலிருந்து விலகுவதாக இலங்கை திடீரென அறிவித்துள்ளது. இந்தத் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகினாலும் சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தைக் கைவிடாமல் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அத்துடன், இலங்கையைத் தப்பவிடாமல் அதற்கு எதிராக மாற்று நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டும்' என்று கோரியே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஓ.5,22,105)

# த.தே.கூ., மு.கா., ஜே.வி.பி. ஓரணியில் பலமான கூட்டு

### கண்டியில் ஹக்கீம் தகவல்

கொழும்பு, பெப். 24

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உட்பட எமது கொள்கையுடன் இணங்கக்கூடிய சிவில் அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு, பரந்துபட்ட கூட்டணியை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறு மற்றும் சிறுபான்மையின கட்சிகளுக்கு எதிராக செயற்படும் ஜனநாயக விரோத சக்திகளை கட்டுப்படுத்துவதற்காக நாம் ஓரணியில் இணைந்து செயற்படுவோம். இதற்கான ஆரம்பக்கட்ட பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டு ள்ளன.

வெகுவிரைவில் பலமான சக்தியாக வருவோம்.

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பிரதான கட்சிகளை ஒருபுறத்தில் வைத்துவிட்டு, சிறு மற்றும் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் இணைந்து, நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு சவால்விடுக்கும் அதேபோல் ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபடும் சக்திகளுக்கு எதிராக ஒரே மேடையில் சமரிடுவதற்கு நாம் தயார் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த குறுகிய காலத்தில் பொதுத்தேர்தலும் நடைபெறுவதால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற தரப்பே நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் வெற்றிபெறும் என்ற கருத்து வழமையாக இருக்கின்றது.

ஆனால் இம்முறை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளடங்கலான எதிரணிக் குழு, பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சி தலைமையிலான கூட்டணிக்குப் பெரிய சவாலை கொடுக்கும் என்பதுடன் அதற்கேற்ற வகையில் கூட்டணியும் கட்டியெழுப்பப்படும் என்பதை நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

(ஓ.5.44)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியை

**திருமதி ஷிவோன் நாளினி ரவீந்திரன்**

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரிக் குடும்பம்.**

(IN/12658)(11.17)

## கண்ணீர் அஞ்சலி

தீவகம் தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக (விவசாயம்) கடமையாற்றும்

**திருமதி பகீரதன் கௌசலா**

அவர்களின் அன்புத் தந்தை

**செல்லத்துரை வேலாயுதம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 17.12.1937
மறைவு 20.02.2020

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்.
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், வேலணை.

# இரண்டாக உடைகிறது முற்போக்குக் கூட்டணி?

## மாற்று நடவடிக்கையில் ராதா அணி!!

நுவரெலியா, பெப். 24

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான தொழிலாளர் தேசிய சங்கம் விட்டுக் கொடுப்புடன் செயற்படாவிட்டால் கூட்டணியிலிருந்து வெளியேறி மாற்று நடவடிக்கையில் இறங்குவதற்கு மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல் உயர்பீடக் கூட்டம் முன்னணியின் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் நுவரெலி யாவில் நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் மூன்று பேர் மாத்திரமே பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும், அதில் ஒருவராக மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர் இருக்க வேண்டும் என்றும் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதனை மீறும் வகையில் தொழிலாளர் தேசிய சங்கம் தமது கட்சியிலிருந்து மூன்று வேட்பாளர்களை களமிறக்க முயற்சிக்கி ன்றது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

'தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் இருவர் போட்டியிட்டால் மாத்திரமே கூட்டணி சாத்தியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் மலையக மக்கள் முன்னணி மாற்று நடவடிக்கையில் களமிறங்க வேண்டும்' என்று உயர்பீட உறுப்பினர்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருக்கு அறிவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாற்று நடவடிக்கையென்பது தனி வழியா அல்லது பிரதான கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது பற்றி முடிவெடுக்கப்படவில்லை.

### சஜித் கூட்டணி சந்திப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், சஜித் தரப்புக்கு மிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. அதன்பின்னர் கூட்டணியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன்போது நுவரெலியா மாவட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் தலைவர் பழனி திகாம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ், உதயா ஆகியோர் போட்டியிடவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் கூட்டணியின் சார்பில் மூவரே போட்டியிட வேண்டும் என இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்த நிலையில் அதனை எவ்வாறு மீற முடியும் எனவும் கேட்டுள்ளார். எனினும், தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு தேசியப்பட்டியல் நியமனமொன்றை வழங்குவதற்கு சஜித் பிரேமதாச இணக்கம் வெளியிட்டுள்ளதால் அதனை இராதாகிருஷ்ணனுக்கு விட்டுக்கொடுக்க முடியும் என திகாம்பரம் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.


தனக்கு போட்டியிட வாய்ப்பளிக்காவிட்டால் தனித்தேனும் களமிறங்குவது உறுதி என உதயாவும் அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மலையக மக்கள் முன்னணியின் உயர்பீடம் நேற்றுகூடி இந்த முடிவை எடுத்துள்ளது.

(ஓ.5,44)

## மரண அறிவித்தல்கள்

### பாலசிங்கம் லோகநாதன்



தோற்றம் 28.03.1955 மறைவு 23.02.2020


குரும்பைகட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் லோகநாதன் நேற்று (23.02.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் வாணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராம கிருஷ்ணன் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், சிவநாதன் (டென்மார்க்) காலஞ்சென்ற நாகநாதன் மற்றும் மங்களவதனி , மதிவதனி, சக்தி நாதன் (சுவிஸ்), சிதம்பரநாதன் (லண்டன்), கணநாதன் (மதுவரிதிணைக்களம்), யோகவதனி (லண்டன்), அருள்நாதன் , ஜெயவதனி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிறேமவதனா(தயா), சாந்தமணி, அமிர்தலிங்கம், சிவநாயகம், சிவரூபினி, உமா, தீபசாந்தினி, கிருபாகரன், மீரா, காந்தன் ஆகியோரின் மைத்துனரும், கார்த்திகா, லக்கியா, ஓவியா, அஸ்வின், ரேதிகா, துவாரகா, ஆதவன், ஆதிரன், கஜனிகா, சர்மி, நிதூஸ், லியோனா, மதுராஜி, அக்சஜா ஆகியோரின் பெரியதந்தையும், ஜெயகஜன், ரூபிகா, விஷ்ணுகா, தக்ஷனா, தர்ஷனா, பிரகாஷ், அக்ஷனா, நவிலாஷ் ஆகியோரின் மாமனாரும், அக்ஷயன், அஸ்விகா, அபினன், அத்விதன், அத்விகா, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.02.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 506 3865/0777250338 தகவல் : சகோதரர்கள்

---



பிறப்பு 03 . 11 . 1932

இறப்பு 23 . 02 . 2020

### நாகமுத்து இரத்தினம் (தம்பித்துரை மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர்)

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி மற்றும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இரத்தினம் (ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர்) நேற்று (23.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வீரசிங்கம் - அன்னபாக்கியம் தம்பதிகளின் மூத்த மருமகனும் லோகநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியை) பாசமிகு கணவரும் நளினா (ஆசிரியை- ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்), நிர்மலன் (அலுவலக பணியாளர் மாவட்ட நீதிமன்றம் - பருத்தித்துறை), விமலன் (ஆசிரியர் - மன்/எருக்கலம்பிட்டி முஸ்லீம் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகதாசன் (முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி - முல்லைத்தீவு), பிரசாந்தி (மருந்து கலவையாளர் ஆரம்ப சுகாதாரப்பிரிவு - பருத்தித்துறை), சங்கீதா (ஆசிரியை - யா/ வீரசிங்கம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலக்ஷன் (மாணவன் மொறட்டுவப் பல்கலைக்கழகம்), தனலக்ஷன், (மாணவன் - யா/ இந்துக் கல்லூரி), சியாமிகா (மாணவி, புற்றளை மகாவித்தியாலயம்), வினுஷாந் (மாணவன், புற்றளை மகாவித்தியாலயம்) கர்ஷா, அனுரந்தன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (24.02.2020) திங்கட்கிழமை பிப 2.00 மணியளவில் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பிரதான வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி 077 075 8462

---

# விபத்து: இளைஞன் காயம்

வவுனியா, பெப். 24

வவுனியா பண்டாரிக்குளத்தில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் டிப்பர் மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் காயமடைந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து பண்டாரிக்குளம் நோக்கிப் பயணித்த டிப்பர், பாடசாலை வீதிக்கு திரும்ப முற்பட்டபோது எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் டிப்பரின் பின் சில்லுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 19 வயது இளைஞன் காயமடைந்தான்.

(ஓ.5,18)

---

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவியும் முன்னாள் விலங்கியல் பாட ஆசிரியராகவும் உப அதிபராகவும், அதிபராகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உதவிப் பரீட்சை ஆணையாளராகவும் சேவையாற்றி நேற்று (23.02.2020) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த

### தேவநாயகி பாலசிங்கம்

(தவநாயகி ரீச்சர்)

(B.Sc, PGDE, M.A, SLEAS)

அவர்களின் பிரிவால் துயருறும்

குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

கல்லூரிச் சமூகம்,

யா/ காரைநகர் இந்துக்கல்லூரி, காரைநகர்.

# மணிவிழா வாழ்த்துக்கள்

மு/யோகபுரம் மகா வித்தியாலயத்தில்
கடந்த **10.01.2012** ஆம் திகதி தொடக்கம்
பிரதி அதிபராகக் கடமையாற்றி **20.02.2020** தனது
சேவையிலிருந்து ஓய்வுபெற்று **இன்று (24.02.2020)**
தனது **அறுபதாவது அகவையைக்** கொண்டாடும்



திருமதி
**புஸ்பவதி**
**பாலசுப்பிரமணியம்**
**'அம்மணி'**
அவர்களை
எமது பாடசாலைச் சமூகம்
சார்பாக இனிய **பிறந்தின**
**வாழ்த்துக்களைத்**
தெரிவிப்பதுடன்
ஓய்வு காலத்தில் சீரும்
சிறப்புடனும் உடல் உள
ஆரோக்கியத்துடனும்
வாழ இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

Congratulations Happy Birthday

**சேவைக் காலம்:**

- நு / கூம் வுட் த.வி - 1985 - 1986
- நு / ஹெலிறூட் த. வி - 1986 - 1988
- யா / ஆசிரியர் கலாசாலை - 1988 - 1989
- மு / பாலிநகர் ம.வி - 1990 - 1997
- மு / மல்லாவி மத்திய கல்லூரி - 1998 - 2012
- மு / யோகபுரம் ம.வி - 2012. 24.02.2020

(m.12663) (13.17)

**நல்லுறவு மன்றம்**
**மு/ யோகபுரம் ம.வி. யோகபுரம்.**

# சொல்வனவற்றை செய்துகாட்டுவோம்

## கூறுகின்றார் தொண்டமான்



கொழும்பு, பெப். 24

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அடிப்படையில் அல்லாது பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள அனைவருக்கும் வீடுகள் பெற்றுக்கொடுக்கும். சொல்வதைச் செய்து காட்டுவதே எங்கள் கொள்கை." என்று காங்கிரஸின் தலைவரும், சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

பொகவந்தலாவ கீழ்பிரிவு தோட்ட மக்களுக்கான தனி வீட்டுத்திட்டம் (நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இந்தத் தோட்டத்தில் 212 குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களுக்கு தனி வீட்டுத்திட்டத்தின் முதற்க ட்டமாக 100 வீடுகளுக்கு அடிக்கல் நடுகை இடம்பெற்றது. இரண்டாம் கட்டமாக மேலும் 112 வீடுகள் அமைக்கப்படும். அப்போது வீடில்லா பிரச்சினை முழுமையாக முடிவுக்குவரும்.

குறிப்பாக ஓர் லயத்தை எடுத்துக் கொண்டால் வீடு அத்தியாவசியமாக தேவைப்படுவோருக்கு முதலில் வழங்கப்படும். அதன்பின்னர் ஒரே வீட்டில் இரண்டு குடும்பங்கள் இருந்தால் அவர்களுக்கு வழங்கப்படும். மூன்றாம் கட்டமாக லயத்தில் எஞ்சியவர்களுக்கு வழங்கப்பட்டு, லயன் முழுமையாக உடைக்கப்படும்.

குருவிக்கூடுகள்போல் வீடுகளை அருகருகே அமைக்காது, முதலில் காணி சுத்திகரிப்பு இடம்பெறும். பின்னர் எல்லை நிர்ணயம் என மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய வகையிலேயே அவை கட்டப்படும். வீட்டுத் திட்டம் முடிவுபெறும் கையோடு தண்ணீர், மின்சாரம் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளும் செய்துகொடுக்கப்படும் - என்றார்.

(கு)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
மணமகனுக்கு மணமகள் தேவை.
(25- 40 வயதிற்குட்பட்ட)
(ex. 234733)(13.17)
**076 495 4694**

## சமையலாள் தேவை

Restaurant ஒன்றிற்கு
சமையல் வேலைக்கு ஆள்
தேவை.
(ஆண்கள் மட்டும்)
(CS/31464)
**077 029 3066, 076 650 8221**


## விற்பனைக்குண்டு

Handanar Box (ஹேண்டனர் பெட்டிகள்) 40 அடி மற்றும் 20 அடி விற்பனைக்குண்டு. கிறேன் வூமறக் வசதிகள் உண்டு.

பழைய பாவனைக்கு உதவாத வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
(AVA/671)(11,17)
**077 959 7231**

othm | University of Chichester | QUEST

UPGRADE YOU | BLC CAMPUS



ஆங்கிலத்தில் உரையாடுவது
உங்களுக்குப் பிரச்சினையா ?

**ஆங்கில மொழிப்பயிற்சி**
**மற்றும்**
**ஆளுமை விருத்திப் பாடநெறி**

## காலம் 6 மாதங்கள்

அனுபவமிக்க விரிவுரையாளர்களின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் தன்னம்பிக்கையுடன் ஆங்கிலத்தில் பேசுதல் மற்றும் எழுதுதல் போன்ற தனிநபர் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட பெறுமதிமிக்க பயிற்சி நெறி. எமது BLC CAMPUS இனால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் உங்களை ஆங்கில மொழியில் சரளமாகப் பேச வைப்பதே எமது ஒரே குறிக்கோளாகும். நீங்கள் எம்முடன் இணைந்துகொள்ள விரும்பினால் இன்றே எம்முடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**கல்வித் தகைமை**
க.பொ.த. சாதாரணதரம்




உள்ளடக்கம்

- Grammar (இலக்கணம்)
- Spoken English & Practical Use of English (ஆங்கிலத்தில் உரையாடுதல் மற்றும் நடைமுறைப் பிரயோகம்)
- English for Businesses (வர்த்தகத்திற்கான ஆங்கிலம்)
- Communication skills (தொடர்பாடல் திறமைகள்)
- Presentaion skills (எடுத்தியம்பும் திறன்)
- Personality Development (ஆளுமை)

BLC CAMPUS

உடன் அழையுங்கள்
**0777174443**

TVEC Approved Centre

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

www.blccampus.edu.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமாகாணத்தில் இளம்
கலைஞர்களை மதிப்பளிக்கும்
விழாவில்
**எந்திரி இ.றொசிஹறிந்**
அவர்கள் தற்காப்பு துறையில்
ஆற்றிய சேவைகளுக்காக யாழ்.
மேலதிக அரசாங்க அதிபர்
**பிரதீபன்,** யாழ்பல்கலைக்கழக
தகுதிவாய்ந்த அதிகாரி **பேரா.கந்தசாமி** ,
கடற்றொழில் அமைச்சர் கௌரவ **டக்ளஸ் தேவானந்தா**
மற்றும் மதகுருமார் முன்னிலையில்
" **இளம் கலைஜோதி"** எனும் விருது வழங்கி கௌரவிக்கப்
பட்டமைக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

-மாணவர்கள்-

## காணவில்லை

### தர்மலிங்கம் திவ்ஜா



**இல.33, 1ஆம்**
ஒழுங்கை, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணத்
தைச் சேர்ந்த
**தர்மலிங்கம் திவ்ஜா**
**வயது 17** கடந்த
**(21.02.2020)** வெள்ளிக்
கிழமையில் இருந்து
காணவில்லை. மனநிலை
குழப்பத்தில் இருந்தார்.
வீட்டிலிருந்து செல்லும்
போது மஞ்சல், கறுப்பு நிற
சட்டை அணிந்திருந்தார்.
இவரை கண்டவர்கள்
கீழ்க்காணும் தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்பு
கொள்ளவும்.

**076 045 7687**
**077 015 8304**
**076 083 6690**



# வாழ் நாள் நீடித்த கல்வி

ஷானுஜா புவனேஸ்வரன்
2ஆம் வருடசிறப்புக்கற்கை மாணவி
கிழக்குப் பல்கலைக்கழகம்

இலத்திரனியலோடு இயங்கிக் கொண்டிருக்கின்ற 21ஆம் நூற்றாண்டிலே, கல்வி என்ற ஒரு பதத்தைஅறியாத மானிடர் இல்லை. கல்வி என்பதற்கான வரைவிலக்கணத்தை நாம் ஒரு போதும் வரையறை செய்யப் போவதில்லை.

கல்வி என்றால் அறியாமையை போக்குதல் என்பார்கள், வாழ்வியலைப் புரிந்து கொள்ளல் என்பார்கள் எண்ணும் எழுத்தும் கல்வி என்பார்கள். ஆனால் கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம்.

அறிவு, திறமை, சிந்தனை, செயல் போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தைச் உருவாக்கிப் பண்பாடு, நடத்தை போன்றவற்றையும் தந்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடையச் செய்வதே கல்வி.

இந்தக் கல்வியைக் கற்பதற்கான காலம் வரையறுக்க முடியாதது. இதைத்தான் பழந்தமிழ் பெண்புலவர் ஔவையார் கூறியுள்ளார் "கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு" என்று. அதாவது எத்தகைய புலமை படைத்தோனும் தான் அறிந்தவற்றை ஆராய்ந்து பார்த்தால் தான் கற்க வேண்டியது உலகத்திற்கு ஒப்பாகவும் கற்றறிந்தது கையளவும் ஆகத்தான் இருக்கும். எனவே ஒரு மனிதன் இந்தப் பிரபஞ்சத்திலே பிறந்தநாள் முதல் அவனது உயிர் உடலை விட்டு பிரியும் வரை அவன் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இதுவே வாழ் நாள் நீடித்த கல்வி எனப்படுகின்றது.

சமூகத்தின் நிலைமைகள் மாற்றம் பெறுவது தொடர்ச்சியாக நிகழ்வதாகும். இதன் விளைவாக புதிய புதிய சவால்களும் பலவகையான தேவைகளும் எழுகின்றன.

அதிகரித்துவரும் தொழிநுட்பவளர்ச்சி,புதியதொழில்களுக்கான புதிய திறன்கள் தேவைப்படுதல், இன்றைய சமூகவாழ்வில் சிக்கல் மிகுந்த பிரச்சினைகள் காணப்படல், போட்டிச் சூழலிலே அனைவரும் கற்றல் அறிவை கொண்டிருப்பதால் தனித்துவமான ஓர் இடத்தை பெற்றுக் கொள்ளுதல் என்பது நபர்களிடையே போட்டியை ஏற்படுத்தல் போன்றவைவும் இணைந்து கல்வியை வாழ்நாள் முழுவதும் தேவைப்படும் ஒன்றாக மாற்றி உள்ளது.

வாழ்நாள் முழுவதும் கற்றல் தனிமனிதனுக்கும் அவன் வாழும் சமுதாயத்திற்கும் நன்மை பயக்கும் ஒரு விடயமாகும்.

மனிதவாழ்க்கைக்கு பிரதானமானது கல்வி கல்வியை வாழ்வதற்காக கற்கக் கூடாது. வாழ்க்கையை வாழ்வதுதான் கல்வி என்றார். கல்வியியலாளர் ரூசோ ஒரு குழந்தை மண்ணில் பிறந்தவுடன் சுவாசி க்கின்றது. அங்கே அந்தக் குழந்தைக்கு சுவாசிக்க கற்றுக் கொடுக்கப்படுவதில்லை, குழந்தை தானாகவே அந்த அறிந்து கொள்கிறது.

நான் இப்புவியில் நிலைத்திருக்க வேண்டுமெனில் சுவாசிக்க வேண்டும். ஆகவே நான் சுவாசிக்கக் கற்றுகொள்ள வேண்டும் என்பதைக் குழந்தை உணர்கிறது.

அதே போன்று ரூசோ குறிப்பிட்டிருக்கிறார் பிள்ளைகளை இயற்கையின் போக்கில் வாழஅனுமதியுங்கள் என்றுஅப்பொழுதுதான் பிள்ளைகள் அனுபவக் கல்வியைக் கற்று கொள்கிறார்கள்.



ஏட்டுக் கல்வியோ நினைவாற்றலோ வாழும் வரை நமக்கு உதவுவதில்லை அனுபவக் கல்விதான் வாழ்க்கைக்கு உகந்ததாகின்றது.

இன்றைய காலத்திலே போட்டி உலகிலே வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான பரீட்சைக்கான கல்விதான் கல்வி, என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் ஒருவன் பிறந்ததில் இருந்து பேசக் கற்றுக் கொள்கிறான், உண்ணக் கற்றுக் கொள்கிறான், பிறரை மதிக்கக் கற்றுக்கொள்கிறான், உணர்வுகளை வெளிப்படுத்தக் கற்றுக்கொள்கிறான் வளரத் தொடங்கியதும் தனது கற்றல் முறைமைகளைப் பின்பற்றுவதற்காக பாடசாலைகளை நாடுகின்றான்.

பின்னர் உயர் கல்விக்காக எமது நாட்டிலிருந்து குறித்த மாணவர்களே அனுமதிக்கப்டுகின்றார்கள். ஏனையவர்கள் தமது கற்றலை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை.

உயர் கல்வியைத் தொடர்பவர்கள் ஒருபுறமும், ஏனையவர்கள் தமது தொழிலுக்கான கல்வியைத் தேடத் தொடங்குகின்றார்கள். தொழில் வாய்ப்பைப்பெற்றபின்னரும் கற்றல் செயற்பாடு, முடிவுறுவதில்லை.

சமூக வளர்ச்சிக்கு ஏற்ப மக்களின் மனநிலைகளும் செயற்பாடுகளும் மாற்றமடைந்துகொண்டிருந்தாலும் வாழ்நாள் நீடித்த கல்வியைத் தம்மை அறியாமல் நுகர்ந்து கொண்டிருப்போரேஅதிகம்.

தங்களுடைய வாழ்நாள் முழுவதும் கற்கவேண்டும், புதிய விடயங்களை அறிய வேண்டும் என்றெண்ணிக் கற்றல் பழக்கத்தை தொடர்பவர்கள் குறைவாகக் காணப்படுகின்றனர். வாழ்நாள் முழுவதும் கல்விகற்றலின் நன்மைகளையும் அதன் மூலமான சமூகத்தின் விளைவுகளையும் நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியதும், ஏனையவர்களுக்குப் புரிய வைக்க வேண்டியது ஒவ்வொரு கற்றல் ஆர்வம் உள்ளவர்களினதும் கடப்பாடாகும்.

ஒருவர் வாழ்நாள் முழுவதும் கற்றலில் ஈடுபடுகின்றபோது, அறிவாற்றல், மனவிடுதலை, பண்பாட்டு அடையாளம், வேலைவாய்ப்பு, வாழ்க்கையைச் சரியாகஅமைத்துக் கொள்வது போன்றவற்றில் சிறந்த தீர்மானங்களையும் சரியான நடைமுறைகளையும் பின்பற்ற முடியும். தற்போது அதிகரித்துள்ள சமூகவியல் குற்றங்கள் கூட வாழ்நாள் நீடித்த கல்வியை செயற்படுத்துவதன் மூலம் கட்டுபடுத்தக் கூடிய ஒன்றாகவே காணப்படுகின்றது .

ஒவ்வொரு தனிநபரின் திறன்களும் அறிவாற்றாலும் வேறுபட்டாதாகவே காணப்படுகின்றன.

நாம் வாழ்நாள் நீடித்த கல்வியை ஒவ்வொருவரிடமும் கொண்டு செல்வதற்கான வழிமுறைகளை நோக்கினால் குழந்தைப்பருவத்தில் இருந்தே அவர்களுடைய திறன்களைக் கண்டறிந்து அந்தத் திறன்களை ஊக்குவிப்பதோடு அவர்களுக்கான துறைகளைத் தேர்ந்தெடுத்து, அந்தத் துறைகளிலே மிக உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து, அதை நோக்கிப் பயணிக்கப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் உந்து சக்திகளாக இருக்கவேண்டும். மேலதிக கல்வியையும் திறனையும் வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்பங்களை உருவாக்கவழிவகை செய்ய வேண்டும். பிரதேச வாரியாக நூல் நிலைய ங்களையும் கலைக் கூடங்களையும்நிறுவுவதோடுதொழில் நுட்பம், விஞ்ஞானம், கலை, இலக்கியம், அரசியல் என அனைத்துத் துறைகள் ரீதியாகவும் ஊக்கப்படுத்தல்களைமேற்கொள்ளவேண்டும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இங்கே வீராப்பு, அங்கே கெஞ்சல்

பொதுத்தேர்தல் வெற்றியை மனதிற்கொண்டே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களில் இருந்து ஒருதலைப்பட்சமாக விலகுவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளமை உள்ளங்கை நெல்லிக்கனி. ஏனெனில் கோத்தாபய பதவியேற்ற பின்னர், பொதுஜன பெரமுனவின் செல்வாக்குச் சிங்கள மக்களிடம் சரியத் தொடங்கியுள்ளது. எதையெல்லாம் நல்லாட்சி அரசு செய்யமுடியாமல் மந்தகதியில் நடந்து கொண்டதோ, அவற்றையெல்லாம் பதவியேற்ற சில கணங்களிலேயே இல்லாமற் செய்யும் வல்லமை கோத்தாபயவுக்கும், ராஜபக் ஷ குடும்பத்தினருக்கும் உண்டு என்ற அதீத நம்பிக்கையைச் சிங்களமக்கள் கொண்டிருந்தனர். ஆனால் அந்த நம்பிக்கையை ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே இல்லாமல் ஆக்கிவிட்டது 'கோத்தா அண்ட் கொம்பனி'. இதனால் ஜனாதிபதித் தேர்தலைப் போல, சிங்கள மக்களின் வாக்குகளை அள்ளமுடியாமல் போய்விடுமோ என்ற அச்சம் அரசைப் பிடித்தாட்டத் தொடங்கியுள்ளது.

எனவேதான் நாடாளுமன்றத்தைக் கலைக்காமல் இன்னும் சில காலம், தேர்தலைத் தள்ளிப்போட அரசு ஆலோசித்து வருகின்றது. ஆனால் நீண்டகாலத்துக்கு இப்படித் தள்ளிப்போட்டால் அரசுக்கு எதிரான எண்ண அலை இன்னும் தீவிரமாகிவிடும். இப்போதிருப்பதை விட காலம் செல்லச் செல்ல வாக்குகள் எண்ணிக்கையில் சரிவுதான் ஏற்படுமே தவிர, உயர்வதற்கான சாத்தியங்கள் குறைவு. ஏனெனில் இப்போதிருக்கும் இலங்கையின் பொருளாதார 'டிசைன்' அப்படி. ஏற்கனவே வங்குரோத்தான நிலையில் இருந்த இலங்கைப் பொருளாதார நிலை கோத்தாபய வந்த பின்னர் இன்னும் பாதாளத்துக்குப் போய்விட்டது. ஆனால் அவையெல்லாம் வெளிதெரியாதபடி, பூச்சு வேலைகள் சிறப்பாகவே செய்யப்பட்டுள்ளன.

வெளிப்பார்வைக்கு வேண்டுமானால் இலங்கை முன்னேற்றப்பாதையில் செல்வது போலவே தோன்றும். உற்று நோக்கினால் மட்டுமே செல்லரித்துப்போன நிலையில் இலங்கையின் பொருளாதாரம் மரணப்படுக்கையில் இருப்பது தெரியவரும். திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கைகளை இந்த அரசு நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருப்பதே இதற்கு முக்கிய காரணம். வரிகள் சிலவற்றைக் குறைத்த அரசு, அதனை ஈடு செய்வதற்குரிய மாற்றுவழிகளை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. எனவே வரிகள் குறைக்கப்பட்ட போதும், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தை அரசால் தடுக்க முடியவில்லை. இதுவும் அரசு பற்றிய மதிப்பு மக்களிடம் இறங்குமுகத்தை நோக்கிச் செல்லக் காரணம். அதனால் தேர்தலை நடத்துவதா, இல்லையா என்ற குழப்பமும் அரசுத்தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தான் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைத் தமக்குச் சாதகமாக மாற்றி, மீண்டும் விரைவாக வாக்கு வங்கியை உயர்த்த அரசு 'ரூம் போட்டு' யோசிக்கின்றது. அப்படி யோசிக்கும் போதுதான் இந்த ஐ.நா. தீர்மான விவகாரம் புலப்பட்டு, உடனேயே அந்தத் தீர்மானங்களில் இருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளது அரசு. அப்படி வீரம் காட்டுவதனூடாக "பார்த்தாயா நம்ம கைப்புள்ளையின் பலத்தை, ஐ.நாவை கூட அசால்டா எதிர்க்கிறதில் யாருக்கு வரும்?" என்று மக்கள் சிலாகித்து, மீண்டும் 'மொட்டின்' பக்கம் சாயக் கூடும் என்று கணித்திருக்கக் கூடும். "

"சிங்கள மக்களுக்காக, இராணுவத்தைக் காப்பாற்றுவதற்காக, இலங்கையின் நற்பெயரைக் காப்பாற்றுவதற்காக இவ்வளவு தூரம் சர்வதேச மட்டத்தில் கம்புசுற்றும் இந்த அரசை நாம் வெற்றிபெறச்செய்ய வைக்க வேண்டும்" என்ற நிலைப்பாட்டுக்கு சிங்கள மக்களைக் கொண்டுவரவே அரசு இப்படி ஒரு குறளிவித்தையைக் காட்டுகின்றது.

அமெரிக்காவையோ, ஐ.நாவையோ பகைத்துவிட்டு நிம்மதியாக இருக்கமுடியாது என்ற அரிவரி கூட தெரியாதவர்களில்லையே 'கோத்தா அண்ட் கொம்பனியினர்'. அதனால் யதார்த்தத்தில் கடந்த காலங்களைப் போல, இங்கே வீராப்புக் காட்டிவிட்டு, ஜெனிவாவில் போய், "இன்னும் கொஞ்சம் கால அவகாசம் தாருங்கள்" என்று கெஞ்சுவதுதான் நடக்கப் போகின்றது.

### வடக்கு மாகாணத்தில்

# பனை சார்ந்த உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள்

### பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 24

வடக்கு மாகாணத்தில் பனை சார்ந்த நார் மற்றும் ஐஸ்கிறீம் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பனையை நம்பி வாழ்வாதாரத்தை நடத்தும் பயனாளிகளுக்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் பனை நார் உற்பத்தி தற்சயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பனை ஐஸ்கிரீமும் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பனையுடன் தொடர்புபட்ட உற்பத்திகளுக்கு உரிய பெறுமதியை பெற்றுக்கொடுக்காததன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பனை சார்ந்த தொழில் துறையில் ஈடுபட்டிருந்தோர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது பனை சார்ந்த தொழில்துறை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் பிர பல்யப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் பனை ஐஸ்கிரீம் சந்தையில் தற்போது அறிமுகப்படுத்தப்படுள்ளது.

இந்தத் தயாரிப்புக்கு பனை சார்ந்த மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இதேவேளை பனை நார்கள் நீண்ட காலமாக இறக்குமதி செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. எதிர்வரும் சில மாதங்களில் இலங்கைக்கு தேவையான பனை நார்கள் உள்ளுரிலேயே உற்பத்தி செய்வதற்கு எதுவாக அமையும். பனையுடன் தொடர்புபட்ட அனைத்து உற்பத்திகளையும் சதொச ஊடாக விற்பனை செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ம-7)

## தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையில் மாற்றம்

கொழும்பு, பெப்.24

தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதற்கான பாடசாலைகளை அடையாளம் காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட ஆய்வறிக்கை கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆய்வுகளை முன்னெடுத்த குழுவாலேயே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனூடாக 124 பாடசலைகள் தேசிய பாடசாலைகளாகப் பெயரிடுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம்.சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகள் அற்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே புதிய தேசிய பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எதிர்வரும் சில மாதங்களுக்குள் அந்தப் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே உள்ள 373 தேசிய பாடசாலைகளுடன் புதிய தேசிய பாடசலைகளாக பெயரிடுவதன் ஊடாக நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 497 ஆக அதிகரிக்கவுள்ளது. (எ)

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை கண்காணிப்பதற்குப் பணிக் குழு

கொழும்பு, பெப்.24

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை நடவடிக்கைகளை கண்காணிக்க பாதுகாப்பு அமைச்சு பணிக் குழு ஒன்றை நிறுவியுள்ளது. ஆறு புலனாய்வு நிறுவனங்களை சேர்ந்த ஆறு அதிகாரிகளை உள்ளடக்கி இந்தப் பணிக்குழு செயற்படும். விசாரணையின் முன்னேற்ற நிலவரம் தொடர்பாக வாராந்த அறிக்கையை, பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ணவுக்கு இந்தக் குழு சமர்பிக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக விரைவான விசாரணையை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி கோத்தாபய விடுத்த உத்தரவைத் தொடர்ந்து இந்தப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ)

## பெரிய வெங்காய விலையில் வீழ்ச்சி

கொழும்பு, பெப்.24

நாடளாவியரீதியில், ஒருகிலோ பெரிய வெங்காயத்துக்கான அதிகபட்ச கட்டுப்பாட்டு விலை 190 ரூபாவாக அறிக்கப்பட்ட நிலையில் பெரிய வெங்காயத்தின் விலை குறைவடைந்துள்ளது என்று மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மெனிங் சந்தையில் பிரதான வர்த்தக சங்கத்தின் பிரதான அமைப்பாளர் அனில் இந்திரஜித், இன்று (நேற்று) ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின்மொத்தவிலை 170 ரூபாவாகக் காணப்பட்டது என்று தெரிவித்தார்.

அதேவேளை, தம்புள்ளை பொருளாதாரமத்தியநிலையத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 160 தொடக்கம் 165 ரூபாவாக காணப்படுகின்றது என்று அந்த மத்திய நிலையத்தின் தலைவர் ஷாந்த ஏக்கநாயக்க தெரிவித்தார். நேற்றுப் பெரிய வெங்காயத்தின்மொத்தவிலை 140 ரூபாவாகக் காணப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், யாழ்ப்பாண சின்ன வெங்காயம் தம்புள்ளை சந்தைக்குக் கொண்டுவரப்படுவதால் அதன் விலை 300 ரூபாவாக குறைவடைந்துள்ளது என்றும் ஷாந்த ஏக்கநாயக்க குறிப்பிட்டார். (எ)

சிங்கள மொழி மூலம்:
பிந்துன் மேனக கமகே
(லங்காதீப)

தமிழில் : வீ.எஸ்.ரீ



# கோத்தாபய ஜனாதிபதி சஜித் பிரதமர்

## சர்ச்சைக்கு வழிகோலும் அரசியல் வாதிகள்

கோத்தாபயராஜபக்ஷவின் புதிய அரசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேலாக ஆட்சியை முன்னெடுத்துச் செல்லும் நிலையிலும் ஐ.தே.கட்சியினரோ தங்கள் மத்தியில் நிலவும் சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலாது இன்னமும் தடுமாறி வருகின்றனர். அதற்கு மேலாக புதுப்புதுச் சிக்கல்களை அரசியலரங்கில் உருவாக்குவதிலேயே அந்தத் தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

'ஐக்கிய மக்கள் சக்தி' யென்ற பெயரில் புதிய கூட்டணியொன்றை சஜித் பிரேமதாசவின் தலைமையில் உருவாக்கிய பின்னரும், கட்சியின் தலைமைத்துவ அதிகாரத்தை தம் வசம் தக்க வைத்துக் கொள்ள ரணில் தலைமையிலான தரப்பு முயல்வதாக சஜித் தரப்பிலிருந்து பெரும் விமர்சனம் முன்வைக்கப்பட்டு வருகின்றது. நாடாளுமன்றத்தின் ஆட்சி அதிகாரத்தைக் எப்படியேனும் கைப்பற்றிக் கொள்ள ஐ.தே.கட்சியினர் மேற்கொள்ளும் முயற்சி, அண்மையில் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாகமகே வெளியிட்டிருக்கும் கருத்து மூலம் கேலிக்கு உள்ளாகியுள்ளமை சஜித் தரப்புக்கு மீண்டும் நெற்றியடியாக அமைந்து விட்டுள்ளது.

* எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றியீட்டி ஐ.தே.கட்சியின் தலைமையிலான அரசொன்றை நிறுவி, ஜனாதிபதி கோத்தாபயடன் இணைந்து செயற்பட்டு நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்ல ஐ.தே.கட்சி தயாராக இருப்பதாக ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாகமகே அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். இது இன்று நாட்டு மக்கள் மத்தியில் பேசுபொருளாகி, அவர்களை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியுள்ளது. இன்று நாடு எதிர்நோக்கும் பின்னடைவிலிருந்து விடுபட வேண்டுமானால், சகல தரப்பினரும் பேதங்களை மறந்து தம்முடன் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டுமென ஜனாதிபதி கோத்தபாய அண்மையில் பொது நிகழ்வொன்றில் வைத்து அழைப்பு விடுத்திருந்தார் என்றும், நாட்டின் சுபீட்சத்துக்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் நல்ல, ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்க ஐ.தே.கட்சியினர் தயாராக இருப்பதாகவும் தயாகமகே தெரிவித்திருந்தார். எதிர்காலத்தில் உருவாகவுள்ள ஐ.தே.கட்சி அரசின் ஆட்சியில், ஜனாதிபதிக்குச் சிரமங்களையும் சிக்கல்களையும் ஏற்படுத்தும் வகையில் ஐ.தே.கட்சி அரசு செயற்படமாட்டாது. ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டை முன்நோக்கி இட்டுச் செல்லும் வகையில் ஐ.தே.கட்சி செயற்பட இருப்பதாகவும் தயாகமகே தெரிவித்திருந்தார். கோத்தாபயவுடன் இணங்கிச் செயற்படுவது ஐ.தே.கட்சிக்கு சிரமமானதொன்றல்ல எனவும் அவர் தெரிவித்தமை, ஐ.தே கட்சியின் புதியதொரு சமிக்ஞையாகுமா? எனச் சிந்திக்கும் அளவுக்கு பெரும்பாலானோரது கவலைக்குக் காரணமாக ஆகியுள்ளது.

### கருத்து வெளிப்பாட்டின் உள்ளார்த்தம் தானென்ன?

உண்மையில் ஜனாதிபதி கோத்தபாயவுடன் இணைந்து அரசொன்றை நிர்வகிப்பது குறித்து ஐ.தே.கட்சியின் சார்பில் முதல்முறையாகக் கருத்து வெளியிட்டிருப்பவர் தயாகமகேதான் என்றில்லை. அஜித் பி பெரேரா போன்ற சஜித்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர்கூட கடந்த காலத்தில் அத்தகைய கருத்தை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்டு வந்துள்ளனர். மிக அண்மைய நாள்களில் தயாகமகேயால் வெளிக்கொணரப்பட்ட, ஈடுபாட்டுடனான தொடர்பாடலுக்கு வழி வகுக்கிறதோ எனச் சந்தேகிக்கும் அளவுக்கு அந்தக் கருத்து இலங்கை அரசியலரங்கில் பலர் மத்தியில் கேள்விக்கு உள்ளாகியுள்ளது. எனவே இந்த வேளையில், ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாகமகே வெளியிட்டிருக்கும் குறித்த கருத்து வெளிப்பாட்டின் உள்ளார்த்தம் தானென்ன? என்ற கேள்வி பல்வேறு தரப்பினர் மத்தியில் தலை தூக்கியுள்ளது.

ஐ.தே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தயாகமகேயினது குறிப்பிட்ட அந்தக் கருத்து வெளிப்பாடு குறித்து, இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸேகான் விதானகே தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐ.தே கட்சி சுயாதீனமானதொரு அரசியல் கட்சியாகும். அரசியல் ரீதியில் வேறு தரப்பினர் எவருடனாவது தொடர்புபேணி அரசொன்றை நிறுவும் தேவை ஐ.தே.கட்சிக்குக் கிடையாது.

அதே சமயம் அரசியல்வாதி எவராக இருப்பினும், தத்தமது கருத்தை முன்வைக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. ஐ.தே.கட்சி பொதுத்தேர்தலுக்கான தனிப்பட்ட கூட்டணியொன்றை அமைத்தால், அந்தக் கூட்டணியூடாக ஈட்டிக்கொள்ளும் வெற்றி சுயாதீனமானதாக அமைதல் வேண்டும்.

ஜனாதிபதி கோத்தாபயவுடன் இணைந்து அரசொன்றை நிறுவுவதனால் பொதுத்தேர்தலுக்காக கூட்டணியொன்றை உருவாக்கும் தேவை எமக்கு எழாதல்லவா? ஆனால் நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தம்மிடையே புரிந்துணர்வுடனான உறவுகளைக் கையாண்டு நாட்டை நிர்வகிக்க வேண்டியுள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

ஏதாவதொரு தேசிய வேலைத்திட்டத்தை பொறுப்புடன் முன்னெடுக்கும்போது இவ்விரு தரப்புக்கள் மத்தியிலும் இணக்கப்பாடொன்று ஏற்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். ஆனால் ஜனாதிபதி மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவும் மிகச்சரியானவை தானெனத் தெரிவிப்பது அல்லது அத்தகைய செயற்பாடுகள் தவறானவை என விமர்சித்து அவற்றைத் திருத்திக்கொள்ள வைக்க முனைவது என்று இது அர்த்தப்பட மாட்டாது.

அந்த வகையில், இந்த நாட்டை முன்நோக்கி செயற்பட வைப்பதற்கு சஜித்பிரேமதாசவைப் பிரதமராக்கி அரசொன்றை நிறுவுவது எமது பொறுப்பும் எதிர்பார்ப்புமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

### ஐ.தே.கட்சி பொறுப்புடன் சிந்திக்க வேண்டும்

நாட்டின் இன்றைய அரசியல் பின்னணியில் நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்ற இலேசான வழி என்ன? என்பது குறித்து ஐ.தே.கட்சி சிந்திக்க வேண்டும். ஜனாதிபதி கோத்தாபய அரசின், மக்களுக்கு நன்மை செய்யாத பயணத்துக்கு எதிராக , நாட்டை நேசிக்கும் சகல தரப்புகளையும் ஒன்று திரட்டக்கூடிய வழிவகைகள் குறித்து ஐ.தே.கட்சி சிந்திக்க வேண்டும். அவ்விதம் ஒன்றிணைந்த வலுவான சக்தியை உருவாக்கும் நோக்கிலேயே ஐ.தே.கட்சியின் செயற்குழு ,சஜித் பிரேமதாசவுக்கு கூட்டணியின் தலைமைத்துவத்தையும் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவியையும் ஒதுக்கிக் கொடுக்க முடிவு செய்தது. ஆனால் தற்போது அந்தத் திட்டத்தை பின்னோக்கி நகர்த்தும் நோக்குடன் பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் சஜித் பிரேமதாசவின் பின்னால் ஒன்று திரண்டுள்ளதால், சஜித் பிரேமதாசவுக்கான பிரபல்யத்தை பின்னோக்கி நகர்த்தும் நோக்குடன் பிரச்சனைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சஜித் பிரேமதாசவிற்கு கூட்டணியின் தலைமைத்துவத்தை வழங்கியுள்ளோம் என ஒரு புறம் நாட்டு மக்களுக்குக் காட்டிக்கொண்டு , மறு புறத்தில் எதிர்வுரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பான வேட்பாளர்கள் பட்டியல் மற்றும் தேசியப் பட்டியல் என்பவற்றைத் தயாரிக்கும் அதிகாரத்தை தம் வசம் வைத்திருக்கும் நோக்கிலேயே ஒரு தரப்பினர் இத்தகைய சிக்கல்களை உருவாக்க முயலும் நிலை தென்படுகிறது. இதனாலேயே செயற்பாடுகள் அனைத்தையும் நியாயமான விதத்தில் முடிவு மேற்கொண்டு செயற்படுத்துமாறு நாம் கூறுகிறோம். சஜித்துக்கான பிரபல்யத்தை, வேறு நபர்களது செயலூக்கமற்ற தன்மையை மூடிமறைக்கப் பயன்படுத்த முனைவது நியாயமற்றதொன்று. எதிர்வரும் பொதுத் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றியீட்டி அரசமைக்க இயலும் என்பது திண்ணம். ஐ.தே.கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் ஜனாதிபதி கோத்தாபயவுக்கும், இந்த நாட்டு மக்களுக்கு நன்மையேதும் செய்ய இயலாது செயற்படும் அவரது அமைச்சரவைக்கும் தகுந்த பாடம் புகட்டும் விதத்தில் நாடாளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றி அரசமைக்க ஐ.தே.கட்சியால் நிச்சயம் இயலும், எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

### வெவ்வேறு கோணங்களில் வெளிவரும் கருத்துக்கள்

அதேசமயம் குருநாகல் மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க குறித்த விடயம் குறித்து வெளியிட்ட கருத்து முக்கியத்துவம் மிக்கதொன்றாகும். ஜனாதிபதியுடன் இணைந்து அரசை நிர்வகிப்பது தொடர்பாக கட்சிக்குள் எந்தவொரு கலந்துரையாடலோ, பேச்சுவார்த்தையோ இடம்பெறவில்லை.

ஆனால் நாடாளுமன்றத்தில் ஆட்சி அதிகாரத்தை ஐ.தே.கட்சி கைப்பற்றினாலும் கூட, நிர்வாக ரீதியில் ஐ.தே.கட்சி ஜனாதிபதி கோத்தாபயவுடன் இணங்கியே செயற்பட வேண்டியிருக்கும் அல்லவா? நடைமுறையிலுள்ள அரசமைப்பின் விதி முறைக்களுக்கு அமைய அத்தகையதொரு பிற்புலமே நிலவுகின்றது என அசோக் அபேசிங்க தெரிவித்திருந்தார்.

மொத்தத்தில் கூட்டி கழித்து பார்க்கும் போது, குறித்தவொரு அரசியல் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தன்னிச்சையாக வெளிப்படுத்தும் அரசியல் கருத்து நிலைப்பாடுகள் எதிரணித் தரப்புக்களாலோ அல்லது அதே கட்சியைச் சேர்ந்தவர்களாலோ கருத்துப் புரள்வாக அர்த்தப்படுத்தபட்டு விமர்சிக்கப்படும் நிலை நிலவுகிறது என்பதே உண்மையாகும்.

உதயன்
newuthayan.com

கூட்டமைப்பை பதிவுசெய்யுமாறு

## இரண்டாவது நாளாக நேற்று உணவு ஒறுப்பு



மன்னார், பெப். 24
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்யுமாறு கோரியும் வேறு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இளைஞர் ஒருவர் இரண்டாவது நாளாக நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடர்கின்றார்.

மன்னாரைச் சேர்ந்த இரத்தினம் ஞானசேகரம் யூலியஸ்(வயது39) என்பவரே மன்னார் நகர சபைக்கு முன்பாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மன்னார் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை அணிவித்துவிட்டு நேற்றுமுன்தினம் அவர் இந்த உணவு ஒறுப்பை ஆரம்பித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து கட்சியைப் பதிவு செய்வதாக முடிவு எடுத்திருந்தது. எனினும், இன்றுவரை கட்சியைப் பதிவுசெய்யவில்லை.

எனவே உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ளோம்.

தமிழர்களின் அடையாளக் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும். அந்தக் கட்சியின் எழுத்து மூல ஆவணத்தை (யாப்பை) உருவாக்கி மக்களுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். சுமார் 20 வருடங்களாக இந்தக் கூட்டமைப்பிலிருந்து சாதிக்க முடியாமல் போன தலைவர்கள் இனியும் ஏதாவது சாதிப்பார்கள் என்பது சாத்தியமற்றது.

எனவே, காலம் தாழ்த்தாது உங்களின் பொறுப்புக்களிலிருந்து விலகி விரும்பினால் கட்சியின் ஆலோசகர்களாகத் தொடருங்கள். இளைஞர்களைக் கொண்டு கட்சியைப் பலப்படுத்தி, தலைமைகளை செயற்றிறன் மற்றும் துடிப்புள்ள அடுத்த தலைமுறையினரிடம் கைமாற்றுங்கள் என்று ஏனைய கோரிக்கைகளை முன்வைக்கின்றேன்.

தமிழ் அரசுக் கட்சி உட்பட தமிழ்த் தேசியக்கூட்டமையின் ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கு கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவுசெய்வதில் எந்த ஆட்சேபனையும் இருக்காது. ஒரு சிலர் மட்டுமே ஆட்சேபிக்கின்றனர் என்பதே இதுவரையுள்ள பொதுவான கருத்து. - என்றார். (த-56)

## கல்லூரி மாணவர்கள் இன்று வரவும்

பளை பெப். 24
பளை மத்திய கல்லூரியில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு இந்த வருடம் இரண்டாவது தடவையாகத் தோற்றவுள்ள மாணவர்களை இன்று திங்கட்கிழமை பாடசாலைக்கு சமூகம் தருமாறு அதிபர் க.உதயகுமாரன் அறிவுறுத்தியுள்ளார். மு.ப. 9 மணிக்கு மாணவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் வரவேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-9)



# ஏப்ரல் 25 பொதுத்தேர்தல் உறுதி சூடுபிடிக்கிறது அரசியல்களம்!

கொழும்பு, பெப். 24
**எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஏப்ரல் 25ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

மே 7ஆம் திகதி வெசாக் பண்டிகை வருவதால் மே முதல்வாரத்திலேயே பௌத்த ஆன்மீக நிகழ்வுகள் ஆரம்பமாகிவிடும். எனவேதான் அதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கும் அதற்கான ஏற்புடைய திகதி ஏப்ரல் 25 எனவும் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆளும், மற்றும் எதிர்க்கட்சிகளின் சார்பில் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் திட்டமிட்ட அடிப்படையில் ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறுவது உறுதியாகியுள்ளது. இதற்காக மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான அரசிதழை ஜனாதிபதி வெளியிடுவார். மார்ச் 12 முதல் 19 திகதிகளுக்குள் வேட்பு மனுக்கள் கோரப்படும். அதேவேளை, பிரதான அரசியல் கட்சிகள் யாவும் இன்று முதல் தேர்தலுக்கான பூர்வாங்க நடவடிக்கையில் இறங்கவுள்ளன. வேட்புமனு குழு அமைத்தல், தொகுதி அமைப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் என தேர்தல் காலத்துக்கே உரித்தான பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன், முக்கியமான சில சந்திப்புகளும் இன்றைய தினம் கொழும்பில் நடைபெறவுள்ளன. (ம-44)

## 64 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு, பெப். 24
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நேசன்குடியிருப்பு கிராமத்தின் 64 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற, முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நேசன்குடியிருப்பு கிராமத்தில் பொருளாதார வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 64 மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஜேர்மனியில் வசிக்கும் இலங்கராசா இரவீந்திரகுமாரின் விருப்பத்தின் பேரில், 'பீட்' அமைப்பின் அனுசரனையுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில், 'பீட்' அமைப்பின் தலைவர் இ.தயாபரன், செயற்பாட்டாளர்கள் ப. சிறீதரன், தா. சசிதரன், என். நகுலன் மற்றும் சிவராசா தம்பதியர் (டென்மார்க்), புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர் எஸ்.எம்.டயஸ் ஆகியோருடன் பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (த-222)



## சைக்கிள் உரிமம் பெறுவதற்கு அ.அட்டையுடன் வரவேண்டும்

வலி.வடக்குப் பிரதேச சபைக்கு மிதிவண்டி உரிமம் பெற வருவோர் தமது அடையாள அட்டையையும் தம்முடன் எடுத்து வருமாறு வலி. வடக்குப் பிரதேச சபைச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

வலி.வடக்குப் பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் விளம்பரப் பதாகைகளுக்குரிய நிறுவனங்கள் உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனுமதிப் பத்திரம் பெறாத நிறுவனங்களின் விளம்பரப் பதாதைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கு)



## தீயணைப்புப் பிரிவை உருவாக்கக் கோரிக்கை

மன்னார், பெப்.24
மன்னார் மாவட்டத்துக்கு "தீயணைப்புப் பிரிவு" ஒன்றை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட வளர் பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பு மற்றும் மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம் என்பவை இணைந்து கடந்த புதன்கிழமை ம்னுவைக் கையளித்தனர்.

மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பின் பொறுப்பதிகாரி ரி.மேரி பிரியங்கா தலைமையில் இந்த மனு மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்துக்கு என இதுவரை தீயணைப்புப் பிரிவு இல்லை. வீடுகள் மற்றும் பொது இடங்கள் தீப்பிடித்து எரிந்த பல சம்பவங்கள் கடந்தகாலங்களில் இடம்பெற்றதுண்டு.

இந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவைப் பெற்றுக் கொண்ட மாவட்டச் செயலர், குறித்த பிரச்சினை தொடர்பாக இந்த ஆண்டுக்குள் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஉறுதியளித்தார்என்றுதெரிவிக்கப்பட்டது. (எ-56)




# அரசை நம்பினோம் ஏமாற்றமே மிச்சம்!

## மயிலிட்டி மக்கள் ஆதங்கம்

**யாழ்ப்பாணம்,பெப்.24**

**‘எமது காணிகளை விடுவிப்பார்கள் என்று காலம் காலமாக வந்த அரசை நம்பினோம். எமது தமிழ் மக்கள் பிரதிநிதிகளை நம்பினோம். எந்தப் பயனும் இல்லை. எந்தவிதமான மாற்று வழிகளும் எமக்குக் கிடைக்கவில்லை. இறுதியில் எமக்கு ஏமாற்றமே கிடைத்தது’ இவ்வாறு வலி.வடக்கு மயிலிட்டி மக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.**

மயிலிட்டியைச் சேர்ந்த எஸ்.சுந்தர் என்பவர் தெரிவித்ததாவது,

‘காணிகளை விடுவிக்குமாறு கடந்த அரசாங்கத்திடம் பல வேண்டுகோளை விடுத்திருந்தோம். ஆனால் அவர்கள் காணிகளை விடுவிக்கவில்லை. எங்களுடைய மக்கள் பலர் தற்போதும் நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்றனர். தற்போதைய புதிய அரசாங்கத்தை முழுமையாக நம்புகின்றோம். எங்களுடைய இடங்கள் விடுவிக்கப்படும் என்று. அந்த இடங்கள் விடுவிக்கப்பட்டால் தான் எங்களுடைய 30 வருடங்களான கனவு மற்றும் மன ஏக்கங்கள் மாறி ஒரு நிறைவான வாழ்க்கையுடன் வாழ முடியும். கடந்த அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும், முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்டவர்களையும் மக்கள் முழுமையாக நம்பினர். ஆனால் எங்களுக்கு எந்தவிதமான மாற்று வழிகளும் கிடைக்கவில்லை. தற்போது நீதிவான் முகாம், கோப்பாப்பிலவு முகாம், சபாவதி கண்ணகை உள்ளிட்ட முகாங்களில் மக்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர். சராசரியாக 200 குடும்பங்கள் நலம்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றன - என்றார்.

(க-111)

## குறும்பட போட்டிக்கு ஆக்கங்கள் கோரல்

தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண பேராயம் நடத்தும், ‘குறும்படப் போட்டி 2020’ க்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதி. வண கலாநிதி டானியல் செ.தியாகராஜாவின் ஆலோசனைக்கமைவாக போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியாளர்கள் டிவிடி மூலமாக எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை அனுப்பலாம்.

‘போதை மற்றும் துஷ்பிரயோகத்துக்கு எதிரான இளைஞர்கள்’, ‘பெண்களுக்கு எதிரான வன்முறை வேண்டாம் என்று சொல்லுங்கள்’ ஆகிய இரண்டு தலைப்புக்களில் படைப்புக்கள் அமைய வேண்டும் என்று தென்னிந்தியத் திருச்சபையின் சமூக செயற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.(க-6)



## முதியவர்களுக்கு மகிழ்வூட்டல்

கொடிகாமம்,பெப்.24

கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியவர்களை மகிழ்விக்கும் நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன.

நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்த அமைச்சின் கீழ் இயங்கும் சமுதாயஞ்சார் சீர்திருத்தத்திணைக்களத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த நிகழ்வு நடைபெற்றது.

அரச முதியோர் இல்ல வளாகத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முதியவர்களை மகிழ்விக்கும் பல்வேறு நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

நிகழ்வில் முதியோர் இல்ல அத்தியட்சகர் வீ.செல்வம், வட மாகாண சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்கள சிரேஷ்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.ஏ.எம். அனஸ், சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முதியோர் இல்ல உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-159)



நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனையின் முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு பிரிவு அலுவலகம் வடக்கு ஆளுநரால் அண்மையில் திறக்கப்பட்டது.

(ஜ-246)

## சுயேச்சையாகப் போட்டிபோட்டு தமிழ்த் தேசியத்தைச் சிதைக்காதீர்

*சட்டத்தரணி டினேசன் தெரிவிப்பு*

மன்னார், பெப். 24

“மன்னாரில் சைவ மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. இவை இன்று நேற்று வந்ததல்ல என்பது உலகம் அறிந்த உண்மை. ஆனால், மன்னார் சைவ மக்கள் தமிழ்த் தேசியப் போராட்டத்துக்குக் கொடுத்த விலை அதிகம். அதற்காக இத்தனை வருடங்கள் கட்டிக்காத்த தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்கு இடமளிக்க முடியாது. அற்ப காரணங்களுக்காக விட்டுக் கொடுக்க முடியாது. இவ்வாறு மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாகக் களமிறங்குவது என்று மன்னார் இந்துக் குருமார் பேரவை அறிக்கை விட்டுள்ளது.

இதற்கு மன்னாரில் உள்ள இந்து மக்கள், இந்து அமைப்புக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் சட்டத்தரணி டினேசன் மேலும் தெரிவித்ததாவது:

சிலைகள் உடைப்பு, திருக்கேதீச்சர அலங்கார வளைவு உடைப்பு இன்னும் பல சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

தவிர, மன்னாரில் கிறிஸ்தவ மக்களும் சைவ மக்களும் மத நல்லிணக்கத்துடனும் விட்டுக்கொடுப்புக்களுடனும் வாழ்ந்து வருகிறார்கள்.

திருக்கேதீச்சரத்தில் அலங்கார வளைவு கட்டப்பட வேண்டும் என்று பெரும்பான்மையான கத்தோலிக்க மக்கள் விரும்புகிறார்கள்.

அனைவரின் ஒப்புதலுடன் திருக்கேதீச்சரத்தில் அலங்கார வளைவு அமைக்கப்படும் என்னும் நம்பிக்கை எம்மிடம் உள்ளது. அதற்காக இத்தனை வருடங்கள் கட்டிக்காத்த தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்கு இடமளிக்க முடியாது.

தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே பேரினவாதம் நம்மைக் கண்டு அஞ்சும். அதைவிட மன்னார் சைவ மக்கள் தமிழ்த் தேசியப் போராட்டத்துக்குக் கொடுத்தவிலை அதிகம். அதனை அற்ப காரணங்களுக்காக விட்டுக் கொடுக்க முடியாது.

மூலை முடுக்கெல்லாம் கட்சிகளை ஆரம்பித்து கட்சி என்ற ஒன்றுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. பதவி ஆசையில் தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்காகவே சிலர் கட்சிகளை ஆரம்பிக்கின்றார்கள். மன்னாரில் மதவாதம் யாரால் எங்கிருந்து ஏவப்படுகிறது என்பதை முதலில் அறிய வேண்டும்.

அத்துடன், மதகுருமார்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

இவர்கள் நினைப்பதுபோல் நாடாளுமன்றம் அவ்வளவு எளிதல்ல. கதிரையால் அடிப்பதையும் மிளகாய்த் தூள் அடிப்பதையும் எதிர்கொள்ள வேண்டும். இவர்களால் அது முடியுமா? ஆகவே மன்னார் இந்துக் குருமார் பேரவையின் அவசரப் புத்தியை மன்னார் சைவ மக்கள் ஏற்க மாட்டார்கள்.” என்று தெரிவித்தார்.

### ஏக்கம் உள்ளது இது நேரமல்ல

சட்டத்தரணி வினோதன் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் சைவ சமயத்தவருக்குப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை எவராலும் மறுக்கமுடியாது. அவற்றை எவ்வாறு களைவது என்ற ஆலோசனை எவரிடமும் இல்லை. தமது பிரச்சினைகளைப் பேசுவதற்கு பிரதிநிதி இல்லை என்ற ஏக்கம் சைவ மக்களிடம் உள்ளது. அதை வெளிக்காட்ட வேண்டிய நேரம் இதுவல்ல.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டுமாதம் இருக்கும் நிலையில் இவ்வாறான முடிவு ஏற்புடையதல்ல. இதனை நீண்டகால திட்டமாக வகுத்து செயற்பட்டிருக்க வேண்டும். அத்துடன் முதலில் சைவ மக்களுக்கு இதுபற்றித் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். அப்படி இல்லாமல் மக்களை குழப்பி தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்க முற்படுவதை ஏற்க முடியாது. ஒழுங்காகச் சிந்தித்துப் பார்த்தால் இந்தமுடிவு ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவாகக் காணப்படுகிறது. இவற்றை அவர்கள் [illegible] முடிந்தளவு தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும்.” என்று தெரிவித்தார்.

(த-213)

# மட்டக்களப்பில் புதிய கூட்டணி




மட்டக்களப்பு, பெப். 24

மட்டக்களப்பில் ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி எனும் பெயரில் புதிய கூட்டுணியொன்று உதயமாகியுள்ளது.

கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் முயற்சியால் ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி எனும் பெயரில் இந்தப் புதிய கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மேற்படி ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு தமிழர் ஒன்றிய தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தனர்.

இதில் ரி.சிவநாதன் தலைமையிலான கிழக்கு தமிழர் ஒன்றியம், வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, எஸ்.வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் அமைப்பு, சோ.கணேசமூர்த்தி தலைமையிலான இலங்கை தமிழர் முற்போக்கு முன்னணி மற்றும் வி.முரளிதரன் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆகிய ஐந்து கட்சிகளும் இணைந்து உதயசூரியன் சின்னத்துடன் தமிழர் ஐக்கிய முன்னணி எனும் பெயருடன் புதிய கூட்டணி யொன்றை உருவாக்கியுள்ளனர். (ம)

# பொது மன்னிப்புக் காலத்தில் 200 ஆயுதங்கள் ஒப்படைப்பு

கொழும்பு, பெப்.24

அண்மையில் வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில், சட்டரீதியிலான அனுமதிப் பத்திரம் இல்லாத அல்லது அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாத சுமார் 200 ஆயுதங்கள், ஒன்பது மாகாணங்களிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவ்விதம் ஒப்படைத்தவர்களுக்கு அதற்கான அனுமதிப் பத்திரம் அல்லது புதுப்பித்தல்களை பெறுவதற்காக சந்தர்ப்பம் அவர்கள் ஆயுதங்களை பொலிஸிடம் ஒப்படைத்த நாளில் இருந்து மூன்று மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிக் கட்டளை சட்டத்தின் பிரகாரம், அனுமதி பத்திரங்களை இல்லர்மல் ஆயுதங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆயுதங்களை வைத்திருக்கும் அனைவரும் உரிய அனுமதி பத்திரத்தினை வைத்திருக்க வேண்டும்.

அனைத்து துப்பாக்கிகளின் அனுமதிப் பத்திரமும் ஒவ்வொரு வருடத்தின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி காலாவதியாகும். அதற்கு முன்னர் உரிய முறைப்படி புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

சட்டவிரோத ஆயுதங்களை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ஒரு வார பொது மன்னிப்பு காலம் முடிவடைந்ததையடுத்து, பொலிஸ் மற்றும் ஏனைய புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து அவற்றை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உரிய நேரத்தில் அனுமதிப்பத்திர புதுப்பித்தல்களை மேற்கொள்ளாதவர்களுக்கு [illegible] கடுமையான [illegible] நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# மாகாண சபைத் தீர்மானத்தால் நிரந்தர நியமனத்துக்கு ஆப்பு

## ஆளுநர் தலையிடலாம் என்று சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 24

வடக்கு மாகாண சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவே ற்றப்பட்ட தவறான தீர்மானம் காரணமாக நூற்றுக் கணக்கானோருக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியாத அவலத்துக்கு உள்ளூராட்சி சபைகள் தள்ளப்பட்டுள்ளன என்று வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு அல்லது தேவைகளுக்கு சபை நிதியில் தற்காலிக நியமனம் செய்யும் அதிகாரத்தை 2015ஆம் ஆண்டு மாகாண சபை நிறைவேற்றியது. உள்ளூராட்சி சபைகளில் தேவைக்கு அதிகமாக ஆளணியினரைச் சேர்ப்பதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானமானது, தேவையேற்படின், உள்வாரி நியமனமாக அன்றி வெளிவாரியாக தனியார் நிறுவனப் பணியாளர்களை குறித்த தேவைக்கு மட்டும் நியமிக்கலாம் என்றனர்.

இதேநேரம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை மாகாண சபை குறைக்க முடியாது என்றபோது நியமன அதிகாரம் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்குரியது என்றனர்.

இருப்பினும், 2015இல் மாகாண சபை இந்தத் தீமானத்தை நிறைவேற்றும்போது உள்ளூராட்சி மன்றங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை இருக்கவில்லை.

2018இல் சபைகள் உருவாகிய பின்பு சபைகளில் நாம் கேள்விகேட்டால் அங்குள்ள அதிகாரிகள் மாகாண சபைத் தீமானத்தையே தூக்கிப் பிடிக்கின்றனர்.

இதேநேரம் 2018 இல் உருவான யாழ்ப்பாண மாநகர சபை மட்டும் முதல்வரின் தற் துணிவால் இந்தத் தீர்மானத்தை ஏற்காது நேரடியாகவே நடைமுறைப்படுத்தி அந்த ஊழியர்களுக்கு வாழ்வளிக்க அங்கிருந்த ஊழியர்களும் உதவி புரிந்துள்ளனர்.

150 நாள்கள் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி பணியாளர்களை நிரந்தரமாக்கும் விடயத்தில் மாநகர சபை மட்டுமே வெற்றிகாணலாம். எமது சபை உட்பட வடக்கு மாகாணத்திலுள்ள ஏனைய பிரதேச சபைகளில் கூட்டுறவுச் சங்கங்கள், பொது அமைப்புக்கள், நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டதாகவே பதிவுகள் காட்டப்படும்.

இதனால் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தமது நிதியில் கொடுப்பனவு வழங்கிய அனைவரையும் இந்தத் திட்டத்தில் உள்வாங்க தற்போதும் சந்தர்ப்பம் உள்ளது. அதாவது தற்போது வடக்கு மாகாண சபை இல்லாத நிலையில் அந்தத் தீர்மானத்தை தற்காலிகமாகவேனும் ஆளுநர் இடைநிறுத்தும் அதிகாரம் உடையவராகின்றார். அதனால் ஏனைய மாகாணத்தில் இல்லாத இந்த அநியாயமான தீர்மானத்தை மாகாண ஆளுநர் ஊழியர்களின் வாழ்வியலைக் கருத்திற்கொண்டு நீக்கவேண்டும். இதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிரதம செயலர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில், எமது சபையில் மட்டும் இந்த வகையில் 15 ஊழியர்கள் உள்ளனர். அவர்களின் இளமைக் காலத்தில் வேலைவாங்கி முதுமைக் காலத்தில் வீதியில் விடப்படுவதற்கு மாகாண சபையின் மேற்குறித்த தீர்மானம் காரணமாக இருக்கக்கூடாது-என்றார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக்ரஞ்சனிடம் கேட்டபோது,

"இந்த விடயம் நீண்டநாள் சர்ச்சைக்குரிய விடயமாகவே காணப்பட்டாலும் அதிகாரிகள் சட்டங்கள், சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது அல்லது அதன்படியே பணியாற்ற வேண்டியதே கடப்பாடு. இந்த தீர்மானம் சபைகளின் அதிகாரத்தை கட்டுப்படுத்தி இருந்தால் அல்லது இதனால் பாதிப்படைந்தால் அப்போதே அது தொடர்பில் கேள்விக்கு உட்படுத்தி தீர்வு கண்டிருக்க வேண்டும். அல்லது மாநகர சபை எந்த விதிமுறைகளின் கீழ் இதைப் பின்பற்றியதோ அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்திருக்க வேண்டும். இறுதி நேரத்தில் அதிகாரிகளால் இதனை மாற்றமுடியாது." -என்றார்

வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதனிடம் கேட்டபோது,

"இந்த விடயத்தில் சபையின் தீர்மானம், நியமனத்தின் வகைகள், ஊழியர்கள் மற்றும் சபைகளிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் உரிய முறையில் சமர்ப்பிக்கும்போதும் சுற்றறிக்கையை மீறமுடியாது. ஆனால் வாழ்வாதாரம் அல்லது மனிதாபிமான அடிப்படையில் அதனை முன்கொண்டுசெல்ல முடியுமா? என்று ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசெல்ல முடியும்."-என்றார். (த-105)

# அ.அட்டைக்கு 31வரையில் விண்ணப்பிக்க முடியும்

கொழும்பு, பெப்.24

இந்த முறை கல்விப் பொதுத்தராதர பரீட்சையில் தோற்றும் மாணவர்கள், தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்வரும் 31ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் ஆலோசனைகள் அடங்கிய சுற்று நிரூபம் வெளியிடப்பட்டள்ளது என்று ஆட்பதிவுத் திணைக்க ளத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க குறிப்பிட்டுள்ளார்.


கடந்த வருடங்களில், தாமதமாக விண்ணப்பங்கள் கிடைத்தமையால் டிசெம்பர் மாதம் வரையில் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தாமதங்களின்றி அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ண ப்பங்களை உரிய காலத்துக்குள் அனுப்பிவைக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் அதிபர்களை கேட்டுக் கொண்டுள்ளது. இ[partly illegible]முறை கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் 3 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிக பரீட்சார்த்திகள் விண்ணப்பிப்பார்கள் எனவும் ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.(எ)

# பாலம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.24

'சப்பிரிக்கம' நிறைவான கிராமம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நவாலி மேற்கில் களையோடை கண்ணகை அம்மன் வீதி பாலம் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளது. மக்கள் பங்கேற்பு திட்டத்தின் கீழ் 5 கருத்திட்டங்கள் முன்மொழியப்பட்டபோது ,நவாலி மேற்கு களையோடை கண்ணகை அம்மன் வீதி பாலமே முதன்மைத் திட்டமாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில், 20 இலட்சம் ரூபா மதிப்பீட்டில் மேற்படி கருத்திட்டம் முன்னோக்கி நகர்த்தப்படவுள்ளது. இந்தத் திட்டம், நவாலி தெற்கில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் மாதர்கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் முன்னகர்த்தப்படவுள்ளது. (ந-50)



# தேசிய சக்தி படையாலேயே திருடரைக் குறைக்க முடியும்

## அநுர குமார தெரிவிப்பு



கொழும்பு, பெப்.24

தேசிய சக்தி படையின் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுப்பதன் மூலமே, மோசடி செய்பவர்களைக் குறைக்க முடியும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த அரசில் ஒரு புதிய வகை இயந்திரம் உள்ளது. திருடர்களைப் பிடித்துச் சிறையில் அடைக்கின்றனர். பின்னர் அவர்களை விடுதலை செய்கின்றனர். அதன்பின்னர் அவர் கள் மிகவும் தூய்மையானவர்கள் போன்று வந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு எங்களுக்குச் சவால் விடுக்கின்றார்கள்.

இந்தத் திருடர்களின் அச்சுறுத்தல்களுக்குளங்கள்நாயின்குரைப்புக்கு உள்ள அளவு கூட மதிப்பு இல்லை. இத்தகைய ஆட்சியாளர்கள் எமது நாட்டை உருவாக்குவார்கள் என்று எண்ணுகின்றீர்களா?. சில அமைச்சர்கள் பணத்துக்காக நாடாளுமன்றத்தைக் கூட விற்பனை செய்யக் கூடியவர்கள்.

நாடாளுமன்றத்தில் மக்களின் பிரச்சினைகள் தவிர்ந்து ஏனைய பிரச்சினைகளே இடம்பெறுகின்றன. இத்தகையதொரு நாடாளுமன்றம் எங்களுக்கு அவசியமா?. உண்மையாகக் கூறவேண்டுமாயின் போகம்பதை சிறைச்சாலையில் உள்ளவர்களை விட மிகவும் மோசமானவர்களே இங்கே உள்ளனர். தங்களது வாழ்வாதாரத்துக்காக கசிப்பு போன்றவற்றை விற்பனை செய்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அதற்கு மூலகாரணமாக உள்ளவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர். நாடாளுமன்றத்தில் திருடர்களை குறைக்க வேண்டுமாயின் தேசியசக்திபடையின்பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்குதேர்ந்தெடுப்பதன் ஊடாகவே அதனை செய்ய முடியும். என்றார். (எ)

# தோல்வி உறுதியானதால் நழுவிக் கொண்டார் ரணில்

## இப்படிக் கூறுகின்றார் ரத்னாயக்க



கொழும்பு, பெப்.24

தோல்வி உறுதியென்பதாலேயே பொதுத் தேர்தலை வழிநடத்தும் பொறுப்பையும் சஜித் பிரேமதாசவிடம் ரணில் விக்கிரமசிங்க ஒப்படைத்துள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் சி.பி. ரத்னாயக்க தெரிவித்துள்ளார். லிந்துலை மட்டுக்கலை பகுதியில் நேற்றுமுன்தினம்தாம் நடத்திய மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இலங்கை பொதுஜன பெரமுனவின் அரசியல் பயணம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரசின் நிதி அறிக்கையைத் தோற்கடித்து, அதன் மூலம் பரப்புரை மேற்கொள்வதற்கு எதிர்கட்சி முற்பட்டது. ஆனால் அந்த வாய்ப்பையும் நாம் இல்லாது செய்தோம். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் அபிவிருத்திஎன்றபோர்வையில்முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்குகொடுப்பனவுகள்வழங்கப்படவில்லை. அதைச் செலுத்துவதற்காகவே நிதி அறிக்கை முன்வைக்கப்பட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நிதி அதிகாரம் ஜனாதிபதியின் கீழ் வந்துவிடும். அதன்பின்னர் நிதி முகாமைத்துவம் உரிய வகையில் இடம்பெறும்.

அதேவேளை, இலங்கை சுதந்திரக்கட்சிக்கும் எமக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்பட்டதாலேயே நாம் புதிய கட்சியை ஆரம்பித்தோம். அதன்பின்னர் அவர்களில் சிலர் எங்களுடன் இணைந்தனர். தற்போது கூட்டணியாக பயணிப்பதற்கு இணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் முரண்ப டவேண்டிய அவசியமில்லை. தொகுதிப் பங்கீடு பற்றியும் பிரச்சினை இல்லை. அது தொடர்பில் அரசியல் சபையே முடிவெடுக்கும். ஜனாதிபதி தேர்தலின் போது பொறுப்பை சஜித்திடம் ரணில் வழங்கினார், அப்போது தோல்வி ஏற்பட்டது. இந்த முறையும் தோல்வி உறுதியென்பதாலேயே பொதுத்தேர்தலை வழிநடத்தும் பொறுப்பும் அவரிடம் ரணிலால் கையளிக்கப்பட்டுள்ளது-என்றார். (எ)

# அரச நிறுவன செயற்பாட்டை அறிவிக்குமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, பெப்.24

எதிர்வரும் மே மாதத்துக்கு முன் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஆள்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றங்கள் தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு நாடு முழுவதும் உள்ள அமைச்சின் செயலாளர்கள், ஆளுநர்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய கடிதம் மூலம் அறிவித்துள்ளார். எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் காலப்பகுதி ஆரம்பித்த பின்னர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை ஊக்கப்படுத்துதல், அரச ஆதனங்களை அல்லது அலுவலர்களை பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். திடீரென வெளியிடப்படும் தேர்தல் அறிவித்தல் மூலம் அதுவரை மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி சார் நடவடிக்கைகள், ஏனைய ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் ஆகியவை இடைநிறுத்தப்படுவதும், அந்தப்பணிகளை முன்னெடுக்கும் அரச அலுவலர்களும், தேர்தல் அலுவலர்களும் பிரச்சினை களுக்கு உள்ளாவதும் எமது கடந்த கால அனுபவமாகும். எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் அரச நிறுவனங்களால் மேற்கொள்ளத் தயாரப்படுத்தப்படும் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றங்கள், அரச நிகழ்வுகள், அடிக்கல் நடும் நிகழ்வுகள், திறப்பு விழாக்கள், புதிதாக ஆரம்பிக்க உள்ள கருத்திட்ட விவரங்கள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை அனுப்பிவைக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஏ-50)

# மக்கள் சந்திப்பு



முல்லைத்தீவு, பெப். 24

வடக்கில் 40 ஆயிரம் வீடுகளை அமைப்பது மற்றும் பாடசாலைகளுக்கு கட்டட வசதிகள் அமைத்தல் மற்றும் யானை வேலி அமைத்தல் உள்ளிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்ட லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் வடமத்திய மாகாண ஆளுநருமான திஸ்ஸ விதாரண மற்றும் தொழில் அதிபர் ரஞ்சித் அபயசேகர ஆகியோர் நேற்றுமுன்தினம் மக்கள் சந்திப்புக்களை நடத்தினர்.

அந்தச் சந்திப்பின் போதே திஸ்ஸ விதாரண மேற்கண்டவாறு கூறினார். சந்திப்பில் வெலிஓயா, முகத்துவாரம், ஜனகபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (த-19)

# நாடாளுமன்று கலைந்தால் 60 எம்.பிக்களுக்கு ஆபத்து!

கொழும்பு, பெப்.24

எதிர்வரும் மார்ச் மாதம் 02ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்தால் சுமார் 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய உரிமைகளை இழக்க நேரிடும் என ஆங்கில இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஓய்வூதிய உரிமையை பெற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் ஐந்து ஆண்டுகள் காலத்தை நிறைவு செய்ய வேண்டும்.

மார்ச் 2 ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்தால் சுமார் 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை ஓய்வூதியத்தை இழக்க நேரிடும் என்று கூறப்ப டுகின்றது. இந்த 60 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுக்க அரசு எந்தவிதமான நடைமுறைகளையும் பின்பற்றாது என்றும், அதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த முறை தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அவர்கள் நிச்சயம் ஓய்வூதியத்தை இழப்பார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

# போதையை அழிப்பதற்கு கையெழுத்துச் சேகரிப்பு



முல்லைத்தீவு, பெப்.24

"போதைப் பொருள் பாவனையைத் தடுப்போம், இளம் தலைமுறையைப் பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில் கையெழுத்துத் திரட்டும் செயற்பாடு கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு நகர் பகுதியில் நடைபெற்றன. இந்த மனு அடுத்த மாதம் சர்வதேச மகளிர் தினத்தன்று 50 ஆயிரம் கையொப்பங்களுடன் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையில் தேசிய மீனவ பெண்கள் சம்மேளனம், மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியனவை இணைந்து முல்லைத்தீவு நகரின் பல பகுதிகளில் கையெழுத்துச் சேகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தன. அரச அதிகாரிகளின் அனுமதியுடன் பாடசாலை மாணவர்களின் கையொப்பங்களும் திரட்டப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

# கடன் தொகையை அதிகரிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## எதிர்க்கட்சியிடம் கோருகின்றது அரசு

கொழும்பு, பெப்.24

நாட்டு மக்கள் மீது எதிர்க்கட்சிக்கு உண்மையில் அக்கறை இருக்குமானால் கடன் தொகை உச்ச எல்லையை அதிகரிக்க நாடாளுமன்றத்தில் ஒத்துழைக்க வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 380 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஆனால் 4 ஆயிரம் 550 பில்லியன் ரூபா அரச செலவாகக் கணிப்பிட்டிருக்கிறது. வரவுக்கும் அதிகமாகச் செலவு கணிப்பிடப்பட்டுள்ளமை கடன்பெற்றுக் கொள்வதற்காகவேயாகும். கடன் பெறாமல் எந்தவொரு அரசும் செயற்படவில்லை. நாளொன்றுக்கான அரச செலவு சுமார் 12.5 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. மாதமொன்றுக்கு அரசைக் கொண்டு செல்ல 379 (37 ஆயிரத்து 900 கோடி) பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. அந்தளவுக்கு வருமானம் கிடைப்பதில்லை. எனவே மேலதிக கடனைப் பெற்றே நாட்டைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் நாடாளுமன்றம் அதற்கு அனுமதியளிக்கவில்லை. எவ்வாறிருப்பினும் அரசமைப்பின் பிரகாரம் மார்ச் முதலாம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதிக்குக் கிடைக்கப் பெறும் அதிகாரங்களைக் கொண்டு அரசைச் செயற்படுத்திச் செல்வதில் எமக்கு எவ்வித சிக்கலும் கிடையாது. ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது ஐக்கிய தேசிய கட்சியின் ஏனைய உறுப்பினர்களுக்கோ உண்மையில் மக்கள் மீது அக்கறையிருந்தால் அவர்கள் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரி கணக்கறிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும்.-என்றார். (எ)

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியில்

# போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு நடவடிக்கை



யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுவருவதால், பொதுமக்கள் போக்குவரத்தில் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர். இதனையடுத்து யாழ்.மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன் மற்றும் பிரதேச செயலர் ச.சுதர்சன் ஆகியோர் நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர்.

ஸ்ரான்லி வீதியில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் தமது விற்பனைப் பொருள்களை வீதியோரங்களில் காட்சிப்படுத்தியுள்ளன. இதனால் பெரும் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அதனை அவதானித்த அதிகாரிகள், வீதியோரங்களில் பொருள்களைக் காட்சிப்படுத்தும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினர். இனிவரும் காலங்களில் வீதியோரங்களில் பொருள்களைக் காட்சிப்படுத்தினால், மாநகர சபை அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தனர்.

அதேவேளை வீதியில் குறியீடுகள் மற்றும் வீதியோரங்கள், வீதியின் மத்தியில் வெள்ளைக்கோடுகள் வரைவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் வீதி ஒழுங்குகளையும் வாகனத் தரிப்பிட ஒழுங்குகளையும், போக்குவரத்துப் பொலிஸார் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. (க-37)

# பருத்தித்துறையில் சிறுவர் மகிழ்வகம்



யாழ்ப்பாணம், பெப். 24

கம்பரெலிய நிதி மற்றும் பருத்தித்துறை நகரசபை நிதி என்பவற்றின் மூலம் சுமார் 30 லட்சம் ரூபாவில் அமைக்கப்பட்ட சிறுவர் மகிழ்வகம் பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் யோ.இருதயராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.ச.அரியகுமார், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் த.ஐங்கரன், மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை, பருத்தித்துறை நகர சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-160)

# சமூக முன்னேற்ற நிலையம் திறப்பு

கொழும்புத்துறை,பெப்.24

புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் அமைக்கப்பட்ட சமூக முன்னேற்ற நிலையம் கடந்த வாரம் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை, அருட்பணி எஸ்.எம்.சுதர்சன் அடிகளார் தலைமையில் திறப்புவிழா இடம்பெற்றது. இந்த நிலையம் அந்தப் பிரதேச மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவிக்கரம் கொடுக்கும் மையமாக விளங்குமென தெரிவிக்கப்படுகிறது. (ப-135)

# மோதலில் இருவர் காயம்

சாவகச்சேரி,பெப்.24

சைக்கிள்கள் திருத்தும் கடை யொன்றில் இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மீசாலை புத்தூர்சந்தியில் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்துள்ளது. (க-9)

# மலையக மாணவர்களுக்கு யாழில் இரண்டு விடுதிகள்

## இந்திய சமுதாயப் பேரவையிடம் உதவிகோருகிறது இ.தொ.கா

கொழும்பு, பெப். 24

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மலையக மாணவர்களுக்கு இரண்டு விடுதிகளை நிர்மாணிக்க இந்திய சமுதாயப் பேரவையிடம் உதவிகோரப்பட்டுள்ளது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா, பொகவந்தலாவ கீழ்பிரிவு தோட்ட மக்களுக்கான தனி வீட்டுத் திட்டம் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'வீடமைப்பு திட்டத்தை கண்காணிப்பதற்காக இரு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். பல்கலைக்கழக மாணவர்களையும் சந்தித்தேன். அப்போது தமக்கான போக்குவரத்து செலவீனம் அதிகம் என மலையக மாணவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இதனை கவனத்தில் எடுத்து தற்போது 100 துவிச்சக்கர வண்டிகளை அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடம்தான் விடுதியில் தங்கலாம். பின்னர் வெளியில் தான் தங்க வேண்டும் என்பதால் எமது மாணவர்களுக்கு விடுதிகளும் தேவையாக உள்ளது.

எனவே, ஆண், பெண் மாணவர்களுக்கு இரண்டு விடுதிகளை அமைப்பதற்கு காணி வழங்குமாறு மாவட்டச் செயலரிடமும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரிடமும் கோரிக்கை விடுத்துள்ளேன். காணி ஒதுக்கீடு செய்யப்படும் பட்சத்தில் விடுதிகளை நிர்மாணிப்பதற்கு உதவுமாறு இலங்கையிலுள்ள இந்திய சமுதாயப் பேரவையிடம் உதவிகோரப்பட்டுள்ளது. எனவே, எல்லாம் சாதகமாக முடியும் என நம்புகின்றேன்' என்றார்.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதன உயர்வு தொடர்பில் இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் தொண்டமான், மார்ச் முதல் நிச்சயம் சம்பள உயர்வு கிடைக்கும் என அறிவித்தார். (ம-44)

# கீரை விலையில் சடுதியான வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 24

கீரையின் விலையில் அண்மைக்காலமாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வலி.கிழக்கில் கூடுதலான விவசாயிகள் இம்முறை கீரைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர், ஊரெழு போன்ற இடங்களில் கூடுதலான விவசாயிகள் கீரைச் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர். தற்போதைய ... யால் செய... ஈடுபட்டவர் ... அறுவ... கீரையை



சந்தைக்கு கூடுதலாக எடுத்து வருவதால் அவற்றின் விலைகளும் திடீரென சரிந்துள்ளன. சந்தையில் தற்போது ஒருபிடி கீரை 20 ரூபா முதல் 30 ரூபா வரை விற்கப்படுகின்றது. (ம-17)



# 24,300 வீடுகள் வன்னிக்கு தேவை

வவுனியா, பெப். 24

வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கு 24 ஆயிரத்து 300 வீடுகள் தேவை என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

ஓமந்தை, மகிழங்குளம் பகுதியில் கொங்கிறீட் வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் 28 ஆயிரம் கொங்கிறீட் வீடுகளை அமைக்க அமைச்சரவை அனுமதி கொடுத்திருந்தாலும் முதல் கட்டமாக 7 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுகின்றன. வவுனியா மாவட்டத்துக்கு இன்னமும் 7ஆயிரத்து 300 வீடுகள் தேவை. மன்னார் மாவட்டத்துக்கு 6ஆயிரத்து 500 வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 10ஆயிரத்து 500 வீடுகளும் தேவை.

முதற்கட்டமாக வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கு 50 வீடுகளும், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 50 வீடுகளும் அமைக்க அனுமதி கிடைத்துள்ளது.

7ஆயிரம் வீடுகளுக்குரிய அனுமதி இருப்பதால் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஆயிரம் பொருத்து வீடுகளை விரைவாக அமைக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார். (த-18)

# குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தத் தீவிர முயற்சி

## சரத் வீரசேகர கூறுகின்றார்

கொழும்பு, பெப்.24

ஜெனிவா தீர்மானத்தில் இருந்து அரசு விலகும் தீர்மானத்தைத் தொடர்ந்து இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் நடவடிக்கைகளை புலம்பெயர் அமைப்புக்கள் மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன என்று இராணுவத்தினரது உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் உள்ளக விவகாரத்தை நல்லாட்சி அரசு தங்களின் அரசியல் தேவைகளுக்காக சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு சென்றது.

அதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முக்கிய பங்களிப்பை வழங்கியது. கூட்டமைப்பினர் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு கடந்த அரசின் எதிர்க்கட்சியாக இருந்து செயற்படவில்லை. மாறாக புலம் பெயர் விடுதலை புலிகளின் அமைப்புக்களின் நோக்கங்களை சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சித்தார்கள்.

அரசின் இந்த தீர்மானத்தை தொடர்ந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் நடவடிக்கைகளை புலம் பெயர் அமைப்புக்கள் மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையை சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நோக்கிலேயே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் ஆரம்பத்தில் இருந்தே ஒர தரப்பினருக்கு சாதகமானது என்பதைக் குறிப்பிட்டோம். இலங்கையை சர்வதேசகுற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு விட்டது-என்றார். (ஏ)

# ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்கு 3 லட்சம் விண்ணப்பங்கள்

கொழும்பு, பெப்.24

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு இதுவரை 3 இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்த பணியகங்களில் அவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார். எதிர்வரும் 26, 27, 28 மற்றும் 29ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கலந்தாலோசிப்பதற்காக இன்று அனைத்து மாவட்டச் செயலர்களும் ஜனாதிபதி செயலகங்களுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். (ஏ)

# சி.ஐ.டி. என்று கூறி அச்சுறுத்தல் விடுப்பு

## ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரையும் அவரது குடும்பத்தினரையும் 'சி.ஐ.டி' என்றுகூறி அறிமுகப்படுத்திய சிலர் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றனர் என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. 2018 ஆம் ஆண்டிலிருந்து தங்கள் ஊடக சங்கத்தை இலக்கு வைத்தும் சங்கத்தில் மனித உரிமைச் செயற்பாட்டில் ஈடுபடும் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்தும் பொலிஸ் விசாரணை, சி.ஐ.டி, ரி.ஐ.டி விசாரணைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் ஊடாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரான ஊடகவியலாளர் செ.நிலாந்தன் மீது தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட நிலையில் கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் நிர்வகிக்கப்படும் மட்டக்களப்பு ஊடக அமையத்துள் ஏழு தமிழ் ஊடகவியலாளர்களை இலக்குவைத்து மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டிருந்தன. சம்பவத்தைத் திசைதிருப்பி அதனைக் கவனத்தில் எடுக்காத பாதுகாப்புத் தரப்புகள் தற்போது சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களை பல்வேறு வகையில் அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. (த-150)

# ஈழத் தமிழருக்கு வேண்டியது இந்திய முறையிலான தீர்வே

## ஆனந்தசங்கரி கூறுகின்றார்

மட்டக்களப்பு, பெப். 24

இனப் பிரச்சினைக்கு இந்திய முறையிலான தீர்வே பொருத்தமானது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

புதிய கூட்டணி உருவாகியது தொடர்பில் மட்டக்களப்பு கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களுடைய இனப் பிரச்சினையை வைத்து 50 ஆண்டுகள் அரசியல் ஓடிவிட்டது. இன்னும் தீரவில்லை. ஆனால் பெரும்பான்மை மக்கள் ஆதரிக்கக்கூடிய வகையிலான ஒரேயொரு தீர்வு இந்திய முறையிலான தீர்வே. இதுவே பொருத்தமானது. எனவே இதனை எல்லோரும் பரிசீலித்துப் பாருங்கள்.

நான் தனிப்பட்ட காரணங்களுக்காக கூட்டணியில் சேரவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி இந்த அமைப்பு செயற்படும். மிகப் பெரும் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை கடந்த காலத்தில் சிலர் தங்களது தேவைக்காக உப



யோகித்து பொய்ப் பரப்புரைகள் செய்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டமிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

பெரியவர்கள் உருவாக்கிய கட்சியை சின்னா பின்னப்படுத்தி தங்கள் தேவைக்காக அந்தக் கட்சியை விற்றுப் பிழைத்த வர்கள் இன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் செயற்படுகின்றனர். முறைப்படி பார்த்தால் அவர்களுடைய அமைப்பே உரிய முறையிலே இயங்கவில்லை.

மட்டக்களப்பில் ஒலிக்கும் குரல் வடக்கு மாகாணத்திலும் ஒலிக்கவேண்டும்.

இந்தச் செயற்பாடு மட்டக்களப்பு மாவட்டத்தை மட்டும் மையப்படுத்தி இருக்காமல் முழு நாட்டின் நலன் கருதி முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார். (த-6)

# 3 வருடச் சேவைக் காலத்தை சேர்க்குமாறு மனு கையளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

வடக்கு மாகாணத்தில் வன்னிப் பிரதேசத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களின் சேவைக் காலத்துடன், அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதில் இருந்து சேவையாற்றிய 3 வருட காலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதிக்கு மனு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சு இந்த 3 வருட காலத்தைத் தங்களுடைய சேவைக் காலத்துடன் இணைத்துக் கொள்ளாததால் உரிய காலத்தில் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, சம்பவ உயர்வு என்பன கிடைக்காதுள்ளன என்று என்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தாங்கள் சேவையாற்றிய 3 வருட காலத்தையும் தங்களது சேவைக் காலத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மனு அனுப்பியுள்ளனர்.

தங்களது இந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்ட கடந்த அரசு, இந்த 3 வருட காலத்தை சேர்த்துக் கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இந்த விடயம் கைவிடப்பட்டது என்றும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எமது சேவைக் காலம், வயது என்பவற்றைக் கருத்திற்கொண்டு எமக்கு வடமாகாணக் கல்வி அமைச்சால் நியமனம் வழங்கப்பட்ட 01.07.2013 இல் இருந்து எமது சேவைக் காலத்தை ஆசிரியர் சேவை தரம் 3-II ஆகக் கணித்து விடப்பட்டுள்ள எமது 3 வருட சேவைக் காலமும் சேர்க்கப்பட ஆவன செய்யுமாறு தங்களை நம்பிக்கையோடு மிகவும் பணிவாகவும் கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த மனுவில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ஐ-426)

# ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிறப்புற்றது சிவராத்திரி விழா!

**வவுனியா, பெப். 24**

**வரலாற்றுச் சிறப்புமிக்க வெடுக்குநாரிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது.**



பொக்கிசம் கனடா அமைப்பின் ஒழுங்கமைப்பில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்வி கற்கும் 500 அறநெறி மாணவர்கள்நெடுங்கேணி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு வருகைதந்து சிவனைத் தரிசித்த அதேவேளை, கலைநிகழ்வுகளையும் நடத்தியிருந்தனர்.

வெடுக்குநாரிமலை ஆலய நிர்வாகத்தினருக்கும், தொல்லியல் திணைக்களத்தினருக்கும் இடையில் குறித்த ஆலயம் தொடர்பில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனினும் மக்களின் எழுச்சியால் கடந்த மூன்று வருடங்களாக ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகள் சிறப்புற இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-110)



## காட்டாவிநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி கலை நிகழ்வுகள்

முல்லைத்தீவு, பெப். 24

முல்லைத்தீவு முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்புற இடம்பெற்றன.

ஆலய வளாகத்தில் அமைந்துள்ள, காட்டாவிநாயகர் கலை அரங்கில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களது பல்வேறு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் கலை நிகழ்வுகளில் பங்குபற்றிய பல மாணவர்கள் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

மேலும் இந்த நிகழ்வில் சிரேஷ்ட சட்டவாளர் ரி.பரஞ்சோதி, கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன், பெருந்திரளான மக்களும் கலந்துகொண்டனர். (ம-246)



## சிறப்புடன் இடம்பெற்ற சிவராத்திரிப் பெருவிழா

யாழ்ப்பாணம், பெப். 24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும் கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலய அறநெறி பாடசாலையும் இணைந்து நடத்திய சிவராத்திரி விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ். பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு இந்த விழா ஆரம்பமாகியது. ஆலய பரிபாலன சபையின் தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, தனி நடனம், பண்ணிசை, வில்லுப்பாட்டு போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. அறநெறிப்பாடசாலையின் ஆசிரியை கு.சோதிநாயகி நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-17)



கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் சிவராத்திரி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. (ம)



இலங்கையின் தான்தோன்றீஸ்வர ஆலயங்களில் ஒன்றான முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வர ஆலயத்தில் மகா சிவராத்திரி பூஜைகள் கலை நிகழ்வுகளும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

## ஹாவெலியா முத்துமாரியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழா





நுவரெலியா, பெப். 24

மகா சிவராத்திரியை முன்னிட்டு நுவரெலியா ஹாவெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சிவராத்திரி விழா சிறப்புற முன்னெடுக்கப்பட்டது. நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வே.இராதாகிருஸ்ணன் நிகழ்வில் கலந்து கொண்டார். (ம)



அளவெட்டி ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (ம)



## கோணேசப்பெருமான் நகர்வலம்

திருகோணமலை, பெப். 24

திருகோணமலை அருள்மிகு மாதுமையம்பாள் உடனுறை கோணேசப் பெருமானது வருடாந்த திருகோணமலை நகர்வலம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு ஆலயத்தில் இருந்து எழுந்தருளி தொடர்ந்து இடம்பெற்றது. (ம)

## அதிபராகி மீள வன்னிக்கா?

# 21 அதிபர்கள் மேன்முறையீடு

யாழ்ப்பாணம், பெப். 24

"ஆசிரியர்களாக வன்னியில் பணியாற்றியுள்ளோம். அதிபர் நியமனம் தந்தவுடன் மீண்டும் வன்னிக்கு அனுப்புவதென்றால் அது முடியாது." என்று புதிதாக அதிபர் நியமனம் வழங்கப்பட்டும் கடமைகளைப் பொறுப் பேற்காத 21 அதிபர்கள் தெரிவிக்கின்றனர். இது அதிகாரிகளுக்கும் நெருக்கடியாகவுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் புதிதாக அதிபர் நியமனம்பெற்ற 80 பேரில் 41 பேர் கடமையைப் பொறுப்பேற்க, 21 பேர் மேன் முறையீடு செய்துள்ள னர். இன்னும் மாற்று ஏற்பாடு கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

"நாம் நீண்டகாலமாக ஆசிரியர்களாகப் பணியாற்றிய சமயம் வன்னி யின் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றியே யாழ்ப்பாண மாவட்டத் துக்கு வந்துள்ளோம். தற்போது அதிபர் சேவைக்குள் உள்வாங்கப் பட்டோம்.

இந்த நிலையில், மீண்டும் வன்னியில் பணியாற்றுமாறு நிர்ப்பந்திக்கப்படு கின்றோம். வன்னியிலும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யுமாறு கோரியவர்களுக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை." என்றும் அதிபர் நியமனம் கிடைத்தோர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளிடம் கேட்டபோது, நியமனம் கிடைத்த 80 பேரில் 41 பேர் பணியைப் பொறுப் பேற்றுள்ளனர். எஞ்சிய 39 பேரில் 21 பேர் மேன் முறையீடு செய்துள் ளனர். 18 பேர் எந்த நடவடிக்கையும் இன்றியுள்ளனர்.

மேன் முறையீடு செய்த 21 பேரும் தாம் ஆசிரியர்களாக இருக்கும்போது வன்னியில் பணியாற்றியுள்ளோம் என்றுகூறும் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

இருப்பினும், அவர்களுக்குச் சில மாற்று நடவடிக்கைகளைத் தெரிவித் துள்ளோம். அதாவது குடாநாட்டில் தீவக வலயத்தில் வெற்றிடம் காணப் படும் பாடசாலை அல்லது வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் உள்ள பாடசாலைகளுக்கு அவர்களை நியமிக்க முடியும். ஏனைய இடங்களுக்கு அவர் களை நியமிக்க முடி யாது. அல்லது வன் னிப் பகுதிக்கு நிய மிக்கப்பட்ட அதிபர் கள் நியமிக்கப்பட்ட வலயத்தில் வேறு பாடசாலைகளில் வெற்றிடம் இருப் பின், அந்த வெற்றி டங்களுக்கு நிய மனம் பெற அவர்க ளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இவை இரண்டுக்கும் இணங்காத நிலை யில் மூன்றாவது தேர் வாக மேன் முறையீடு செய்துள்ள அதிபர்கள் வேண்டுமானால் தம்மிடையே முடியும் என்ற சலுகை அவர்க ளுக்கு வழங்கப்பட் டுள்ளன. இவை அனைத்துக்கும் நாளை மறுதினம் புதன்கிழமை மட் டுமே காலஅவகாசம் வழங்கப்படும். இவ் வாறான மாற்றத்தை விரும்பாதுவிடின் அதிபராக தேர்வு செய்ய முன்பு ஆசிரி யராகப் பணியாற்றிய நிலையைத் தொடர வும் முடியும். எனத் தெரிவித்தனர். (த-105)

# அதிகரித்த ஆதன வரியை குறைப்பது பற்றி ஆராய்க

## வடக்கு ஆளுநர் பணிப்பு

ஆதன வரியைக் குறைப்பது பற்றி சபையின் அபிப்பிராயத்தைப்பெற்று அனுப்புமாறு வடக்கு மாகாண ஆளுநர் கரைச்சிப் பிரதேச சபை செயலாளருக்கு முகவரி யிட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

இலங்கையில் வறுமை அதிகமுள்ள கிளி நொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் வாழும் மக்களிடமிருந்து அதிக ரித்த வீதத்தில் ஆதன வரி அறவி டப்படுவதாக தொடர்ச்சியாக மக் களிடமிருந்து முறைப்பாடு கள் கிடைத்துள்ளன. வரியைக் குறைக்குமாறுகோரி வர்த்தகர் கள் போராட்டத்திலும் ஈடுபட்டிருந் தனர். இந்த நிலையில், ஆளுநர் சார்பில் அவரின் உதவிச் செய லாளர் கே.எஸ். செல்வநாயகம் ஒப்பமிட்டுக் கடிதம் அனுப்பியுள் ளார். கடிதத்தில்,

தங்கள் சபையால் (கரைச்சி பிர தேச சபை) அதிகளவில் ஆதன வரி அறவிடப்படுவதாகவும் இது வாழ்வாதாரத்தில் பின்தங்கி யுள்ள தமக்கு மேலும் சுமையை அளிப்பதாகவும் குறிப்பிட்டு ஆத னவரியை குறைப்பதற்கு ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கோரி யுள்ளனர். இலங்கையில் வறுமை அதிகமுள்ள மாவட்டங்களில் தங்கள் மாவட்டமும் ஒன்று. இந்தவிடயத்தை சபையில் முன்வைத்து அபிப்பிராயத்தை ஆளுநருக்குச் சமர்ப்பிக்க ஏதுவாக எமக்கு அனுப்பி வைக்குமாறுகேட்டுக்கொள்கின்றேன். என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-214)

St John Sri Lanka

**சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு**

சென்ஜோன் அம்புலன்ஸ் சான்றிதழ் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் அங்கத்தவர்களிடம் இருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது (ஆண், பெண் இருபாலாரும்). இதற்கான தெரிவு **29.02.2020** சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

**சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்தில் இடம்பெறும்.**

- முதலுதவி பயிற்றுவிப்பாளர் (பயிற்றுவிப்பின் போது கொடுப்பனவு வழங்கப்படும்)
- உதவி மாவட்ட ஆணையாளர்கள், மாவட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள்.
- அம்புலன்ஸ் சாரதி (மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும். பஸ் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். முதலுதவி சான்றிதழ் தேவை இல்லை.)
- கணினி தட்டச்சுதாரர்.

சென்ஜோன் அம்புலன்ஸ்
இல 161, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

செ.செல்வறஞ்ஜன் மாவட்ட ஆணையாளர்
தொலைபேசி இல.
**075 761 0010**

அவசர அம்புலன்ஸ் சேவை தொலைபேசி இல. **021 321 4444**

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி ஆன் கியூறி ஆனந்தராஜா அவர்களின் அன்புத் தந்தை

**இருதயநாதர் பீற்றர்தாஸ்**

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரிக் குடும்பம்.**

(JN/12659)(11.17)

**மரண அறிவித்தல்**

பிறப்பு 15 . 02 . 1950



இறப்பு 22 . 02 . 2020

**திருமதி றோக் அல்மஸ் மரியபுஸ்பம்**

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோக் அல்மஸ் மரியபுஸ்பம் 22.02.2020 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசேந்தி - திரேசம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான தங்கராசா - லூசியா தம்பதிகளின் மருமகளும், றோக் அல்மஸின் பாசமிகு மனைவியும், சூசைதாஸ், காலஞ் சென்ற கிறிஸ்தோப்பர் மற்றும் துரைஇரத்தினம், திரேசன், செபஸ்ரியன் (அரசன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், வினிதா, நிகிலா, நிமலன் (றொய்சன்), டியூலன் (வின்சன்), டியூறா (மயூறா) ஆகியோரின் அன்புத் தாயாரும், யூட்வென்சர், ஸ்ரனிஸ்லாஸ், ஜெனீவா, சர்மிலா, அருணன் ஆகி-யோரின் மாமியும், மரியறூபினி, அபிஷன், அனஸ்ரன், ஸ்ரனிஷியா, ஸ்ரெபான், ஷானுஜன், ஷஜனிகா, பெனியேல், ஜெனா, ஷாறா, பியூலா, அக்ஷயன், அபிஷயன், அன்றுக்ஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.02.2020) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர்.

(CS/31469)(11.17)

தகவல்:-
குடும்பத்தினர்.

**யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் பல்பொருள் விற்பனை நிலையம் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.04.2020 தொடக்கம் 31.03.2021 வரை**

யாழ் போதனாவைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான /தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களிடமிருந்து 01.04.2020 தொடக்கம் - 31.03.2021 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

01. வைத்தியசாலை பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்களை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்
    1. பிரதான சிற்றூண்டிச்சாலை
    2. கிளினிக் கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள சிற்றூண்டிச்சாலை
    3. பல்பொருள் விற்பனை நிலையம் (Food City)
02. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் "கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங் களை அலுவலக நாட்களில் 24.02.2020 தொடக்கம் 10.03.2020 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 28.02.2020 ம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
04. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 50.000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
05. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப்பகுதியி னால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத் தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
06. விலைக் கேள்விகள் கடித உறையின் மேல் பகுதியில் சிற்றுண்டிச்சாலையின் பெயரினைக் குறிப்பிட்டு 10.03.2020 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இப் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப் பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடி யாகத் திறக்கப்படும்.
07. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்திய சாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
08. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் தொலைபேசி இலக்கத்துடன் 021-2222261 (Exchange No 204) தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
09. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வ-தற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/பிராந்திய பெறுகைக்குழு**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்,**

(JN/12650)(11.17)

# அறுவடை செய்த வயல்களில் மறுசெய்கையை ஆரம்பிக்குக!

## மாவட்ட விவசாயத் திணைக்களம் அறிவுறுத்தல்

**யாழ்ப்பாணம், பெப்.24**

**யாழ்ப்பாண குடாநாட்டில் பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடையை நிறைவு செய்த விவசாயிகள் தமது வயல்களில் மறு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட விவசாய திணைக்களம் அறிவித்துள்ளது.**

இம்முறை போகத்தின்போது குறைந்தது 900 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்புகளில் இந்த மறுபயிர் செய்கையை மேற்கொள்ள திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இந்தச்செய்கையை ஊக்குவிப்பதற்கு ஒவ்வொரு போதனாசிரியர் பிரிவுகள் தோறும் இது தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போது நெற்பயிர்கள் அறுவடை செய்யும் பணிகள்நிறைவடைந்துள்ளன. வயல்கள் ஈரத்தன்மையாகவும் உள்ளன. இரவு வேளையில் குளிரான காலநிலையும் காணப்படுகின்றன. இவற்றை பயன்படுத்தி விவசாயிகள் தமது வயல்களில் உழுந்து, பயறு, கௌப்பி, எள்ளு, கடலை போன்ற மறுபயிர் செய்கையில் ஈடுபட முன்வர வேண்டும். இந்த பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான விதைகளை விவசாய திணைக்களம் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)



## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்ப்பாணம் அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (ஐ)

## பாடசாலைக்கு சமுகம் தரவும்

கிளிநொச்சி,பெப்.24

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 2020 க.பொ.த.உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு இரண்டாவது தடவை தோற்றும் மாணவர்கள், தேசிய அடையாள அட்டையுடன், பாடசாலைச் சீருடையுடன், பாடசாலை அலுவலகத்துக்கு வருகை தருமாறு அதிபர் மு.இரவீந்திரன் கேட்டுள்ளார். (க-214)



ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் தரம் 8 கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு ஆசிரியர் ரகுராமின் கோரிக்கைக்கு ஏற்ப நலன்விரும்பி திருமதி பிரபாலினி நிமலனால் சைக்கிள் ஒன்று அண்மையில் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டது. (ந)

## விசேடபாடசாலையின் விளையாட்டுப் போட்டி

வவுனியா,பெப்.24

வவுனியா மாவட்ட ஓஹான் நிறுவனத்தின் புது வாழ்வுப் பூங்கா விசேடபாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீனிவாசன், கௌரவ விருந்தினராக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் க.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவை உத்தியோகத்தர் க.இராஜசேகர் மற்றும் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.வசந்தகுமார் மற்றும் ஓஹான் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் பாண்ட் வாத்திய அணிநடையுடன் விருந்தினர்களை வரவேற்றனர். போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (க-222)





## மெய்வன்மைப் போட்டி

கரவெட்டி துன்னாலை காசிநாதர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவர் ப.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இடைவேளை நிகழ்வுகள் என்பன நடைபெற்றன. (ஐ)







## புத்தகப் பைகள் கையளிப்பு

வவுனியா,பெப்.24

வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் கல்விகற்கும் 20 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அண்மையில் வழங்கப்பட்டன. கனடாவாழ் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவி திருமதி அம்பிகா தனது கணவரின் முதலாம் ஆண்டு நினைவாக இந்த உதவியை வழங்கியுள்ளார். (ஐ-222)

## மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

பளை,பெப்.24

பளை மத்திய கல்லூரியில் 2020 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவை தோற்றும் மாணவர்களுக்கு, அதிபர் முக்கிய அறிவிப்பு விடுத்துள்ளார்.

இன்று 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு, தேசிய அடையாள அட்டையுடன் மாணவர்களை வருகை தருமாறு அதிபர் க.உதயகுமார் கேட்டுள்ளார். (க-9)

# இறால் வளர்ப்புக்கு எனக் கூறி 140 ஏக்.காணி தாரைவார்ப்பு!

## பருத்தித்துறை பிரதேச சபை கண்டனம்

**யாழ்ப்பாணம், பெப். 24**

**வடமராட்சி கிழக்கு பிரதேசம் அம்பன் கொட்டோடை கடற்கரையில் இறால் வளர்ப்பு எனும் பெயரில் தனியார் ஒருவருக்கு 140 ஏக்கர் காணி வழங்குவதை பருத்தித்துறை பிரதேச சபை வன்மையாகக் கண்டித்துள்ளது. அவ்வாறு காணி வழங்குவதை உடனடியாக நிறுத்துமாறுகோரி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்குக் கடிதம் அனுப்புவது என்றும் சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் அ.ச.அரியகுமார் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அமர்வில், வீதிகளில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அவற்றைத் திருத்தியமைக்க இதுவரை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று உறுப்பினர்கள் தவிசாளரிடம் கேள்வி எழுப்பினர்.

மின்சார சபை மட்டுமே திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என்றும் தாம் திருத்தம் செய்ய மின்சார சபையிடம் எழுத்து மூலம் விண்ணப்பித்தபோதும் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை என்றும் மாவட்டசெயலர் தலைமையில் குழு அமைத்தும் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்றும் தவிசாளர் தெரிவித்தார். சபைக்கான கொடி இதுவரை உருவாக்கப்படவில்லை என்றுகூறி சபையிடம் அனுமதி கோரப்பட்டது.

பொது அறிவித்தல் மூலமாக அனுமதி கோரி வடிவங்கள் ஆலோசனைக்கு அமைவாக ஆராய்ந்து முடிவெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மலக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுகின்றன என்று பொதுமக்கள் கூறுகின்றனர் என்றும் இனிமேல், கலி பவுசர் அங்கு வருமானால் தீ வைத்துக் கொளுத்தப்படும் என்று மக்கள் அறிவித்துள்ளனர் என்றும் சபை உறுப்பினர் தர்சன் சபையில் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த தவிசாளர், மலக்கழிவு அகற்றப்படுவது ஒரு மாதமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் இவ்வாறு பாதுகாப்பு அற்ற முறையிலேயே கழிவகற்றல் இடம்பெறுகின்றது என்று தெரிவித்தார். மருதங்கேணி இறைச்சிக் கடையை இதுவரை எவரும் ஏலம் எடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

தொழில் நிலையங்களைப் பதிவு செய்வதற்குக் கட்டணம் தொடர்பில் ஆராயப்பட்டு வர்த்தமானியில் குறிப்பிட்ட பெறுமதிகளை அறவிட சபை அனுமதி வழங்கியுள்ளது. வடமராட்சியில் சக்கோட்டை, வல்லிபுர ஆழ்வார் கோவில் வளாகம், குருக்கட்டுப் பிள்ளையார் கோவில் வளாகம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டவை ஜி அலைக்கதிர் கோபுரம் அல்ல என்றும் அந்த நிறுவனம் சபைக்கு அறிவித்திருக்கின்றது என்றும் தவிசாளர் தெரிவித்தார். (து)

## குடமியனில் 6 பேருக்கு டெங்கு எச்சரிக்கை

சாவகச்சேரி, பெப். 24

வரணி குடமியன் பகுதியில் சுகாதாரப் பகுதியினர் நடத்திய டெங்கு பரிசோதனையில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட குடியிருப்பாளர்கள் ஆறு பேருக்கு காணி துப்புரவு செய்ய இரு வாரங்கள் கால அவகாசம் வழங்கி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டெங்கு களப் பணியாளர்கள் கிராமிய டெங்குக் குழுவினர் இணைந்து 68 இடங்களில் தரிசிப்புக்களை மேற்கொண்டனர். 29 குடியிருப்புகள் மற்றும் காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய சூழல் காணப்பட்டன. இவற்றில் மூன்று இடங்களில் தண்ணீர் ஏந்து பாத்திரங்களில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டுள்ளன. (த-9)

# சிகிச்சையின்போது நிதி வழங்குவதற்குத் திட்டம்

தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு உதவியளிக்கும் வகையிலான புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

'ஆரோக்கியா' என்று அழைக்கப்படும் இந்தத் திட்டத்தின் மூலமாக வறுமையில் உள்ள பல முதியவர்கள் பயனடைய வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக வருமானம் குறைந்த 60 வயதைப் பூர்த்திசெய்தவர்கள் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டு வருகின்றனர். அவ்வாறானவர்களுக்கு உதவியளிக்கும் முகமாகவே இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி தொற்றா நோய்களான புற்றுநோய், சிறுநீரகம் சம்பந்தமான நோய், இருதயநோய், மனநோய் போன்றனவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த உதவித்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

இந்தத் திட்டத்தில் இணைந்து பயன்பெறவிரும்புபவர்கள் தமது பகுதி கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும். (த-121)



யாழ்ப்பாணம் மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயத்துக்கு, யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினரால், விளையாட்டு உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன. (க-222)

# பெரமுனவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆசனங்கள்

## அதன் வேட்பாளர் கூறுகின்றார்

வவுனியா, பெப். 24

சிறிலங்கா பொதுஜன பெரமுன வன்னி மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் அதிக வாக்குகளைப் பெற்று ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றும் என்று முசலி பிரதேச சபை முன்னாள் தவிசாளர் டயிள்யூ.எம்.ஏ.எலிஹயாஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதி விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் போட்டியிடவுள்ளேன். இன, மத பேதமின்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் சகோதரர்களும் புத்தி ஜீவிகள், கல்வியியலாளர்கள் போன்றோர் ஒற்றுமையாகவும் அனைவருடனும் இணைந்து ஒன்றாகப் பயணித்து கொண்டிருக்கின்றனர்.

வன்னி மாவட்டத்தில் அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். இது ஒரு மாற்றத்தை நோக்கிய பயணம் - என்றார். (த-110)

# செவ்விளநீருக்கு யாழில் கிராக்கி

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செவ்விளநீருக்குப் பெரும் கிராக்கியும் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.


இதனால் தெற்கில் இருந்து கூடுதலான செவ் விளநீர் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன.

இது யாழ்ப்பாண நகரை அண்மித்த பகுதிகளில் 130 ரூபா தொடக்கம் 150 ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றன.

தற்போதைய உஷ்ணமான கால நிலை, அதிக வெப்பம் போன்றனவற்றால் கூடுதலான மக்கள் செவ்விளநீரை அதிகம் விரும்புகின்றனர்.



குடாநாட்டில் தற்போது நாளாந்தம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செவ்விளநீர் விற்பனையாகின்றன என்று இளநீர் வியாபாரி ஒருவர் தெரிவித்தார். தற்போதைய வறட்சியான கால நிலையால் செவ்விளநீர் மரங்களின் விளைச்சல் குறைந்துள்ளது என்று அந்த வியாபாரி மேலும் தெரிவித்தார். (த-17)



# ராசிகளுக்கேற்ற வண்ணங்கள்

ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு நிறத்துடன் தொடர்பில் உள்ளது என்பார்கள். அதேபோல், நிறங்களுக்கும் கிரகங்களுக்கும் தொடர்புண்டு.

கிரகங்களின் நிறத்தை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னதாக தொலைநோக்குக் கருவிகள் இல்லாமலே, எமது ஜோதிட சாஸ்திர வல்லுநர்கள் கண்டறிந்துள்ளார்கள் என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

ஒரு மனிதனின் எண்ணம், சொல், செயல், சிந்தனை, திறன், ஆகியவை அவன் பயன்படுத்தும் நிறத்தைக்கொண்டே வெளிப்படுகின்றன. இந்தப் பூமியில் உள்ள ஒவ்வொரு ஜீவராசியும், பொருளும், மலர்களும், பழங்களும், காய்கறிகளும் ஏதோ ஒரு நிறத்தின் அமைப்பைக்கொண்டே இருக்கின்றன. இவை அனைத்தும் இந்த அண்டவெளியைக் கடந்து நிற்கும் கிரகங்களின் படைப்பே.

அவற்றில் சனி கறுப்பு, நீலம் மற்றும் கருநீலம் ஆகியவற்றுக்குக் காரகத்துவம் பெற்றது. செவ்வாயோ சிவப்பு நிறம் கொண்டது. சந்திரன் வெண்மை நிறம் கொண்டவராவார்.

சூரியன் வெளிர் மஞ்சள், வெளிர் சிவப்பு நிறம் கொண்டு பிரகாசிக்கிறார். புதன் பகவான் பச்சை நிறத்துக்கு உரியவர் ஆகிறார். குரு பகவான் மங்கலகரமான மஞ்சள் நிறத்தைக் கொண்டவர். மகாவிஷ்ணுவின் பாதத்தில் உள்ள சுக்கிரன் வெள்ளை, வெள்ளி மற்றும் தாமரைப்பூ இதழின் நிறத்தைக் குறிக்கிறார். ராகு பகவான் கருமை நிற நாகம் என்பதால், சாம்பல் மற்றும் கறுப்பு நிறத்தைக் கொண்டவர். கேது பகவான் பழுப்பு மற்றும் சிவப்பு நிறம் கொண்டவர்.

இனி, ராசிகளுக்கேற்ற வண்ணங்களைப் பற்றி அறிவோம்.

**மேஷம் மற்றும் விருச்சிகம்:** இந்த ராசிக்காரர்களுக்கு சிவப்பு, வெளிர் சிவப்பு, வெளிர் மஞ்சள் நிறம் ஆகியவை ஏற்றவை. இந்த நிறங் களைத் தங்களுக்கு அதிர்ஷ்டமான நிறமாகக் கொள்ளலாம். செவ்வாய்க்குச் சொந்தமான வீடாகவே இவை (மேஷம், விருச்சிகம்) பார்க்கப்பட்டாலும் சூரியன் இவற்றில் உச்சம் அடைகிறார். சாம்பல் நிறத்தின் மீதும் பழுப்பு நிறத்தின் மீதும் ஓர் ஈடுபாடு விருச்சிக ராசிக்காரர்களுக்கு இருக்கும். ஏனெனில், ராகுவும் கேதுவும் விருச்சிக ராசியில் உச்சம் அடைகிறார்கள்.

**ரிஷபம் மற்றும் துலாம்:** இந்த ராசிக்காரர்களுக்கு சுக்கிரனுக்கு உரித்தான வெள்ளி, வெண்மை, கறுப்பு மற்றும் கருநீல நிறத்தின் மீது அதிக ஈர்ப்பு இருக்கும். ஏனெனில் சந்திரன் ரிஷபத்தில் உச்சம் அடைகிறார். சனி, துலாம் ராசியில் உச்சமடைகிறார்.

**மிதுனம் மற்றும் கன்னி:** இந்த ராசிக்காரர்கள், புதனுக்கு உரித்தான பச்சை நிறத்தின் மீது விருப்பம் உள்ளவர்களாக இருப்பர்.

**கடகம்:** இந்த ராசிக்காரர்களுக்கு வெண்மை மற்றும் மஞ்சள் நிறத்தை அதிர்ஷ்டமானதாகக் கொள்ளலாம். கடகம் சந்திரனின் சொந்த வீடாக இருந்தாலும், குரு பகவான் உச்சம் அடைந்து அதிகாரம் பெறுகிறார்.

**சிம்மம்:** இந்த ராசி சூரிய பகவானின் சொந்த வீடு. இந்த ராசிக்காரர்களுக்கு வெளிர் மஞ்சள் மற்றும் வெளிர் சிவப்பு போன்ற நிறங்கள் அதிர்ஷ்டம் தரும். சூரியன் இருக்கும்போது வேறு எந்தக் கிரகமும் அந்த இடத்தில் அதிகாரம் பெறுவது இல்லை.

**மகரம் மற்றும் கும்பம்:** இந்த ராசிக்காரர்களுக்குக் கறுப்பு, கருநீலம் மற்றும் வெளிர் நீல நிறங்கள் வெற்றி தரும். கிரகங்கள் நீசமாகும்போது அவற்றின் பலம் குறைந்துபோவதால் அந்த நிலையில் நாம் நிறத்தைப் பற்றிக் கவலை அடைய வேண்டியதில்லை.

**தனுசு மற்றும் மீனம்:** இந்த ராசிக்காரர்களுக்கு மஞ்சள் நிறத்தின் மீது ஒரு பிடிப்பு இருந்தாலும்… சுக்கிரன் மீன ராசியில் உச்சம் பெறுவதால், வெள்ளி மற்றும் செந்தாமரை இதழின் நிறங்களின் மீது ஒரு விருப்பம் இருப்பதைக் காணமுடியும்.

கிரகங்களின் உச்சம், நீசம் மற்றும் ஆட்சி நிலைகளைப் பொறுத்தே அந்தந்த கிரகத்துக்குரிய நிறங்கள் அதிர்ஷ்ட நிறங்களா, இல்லையா என்பதைச் சொல்ல முடியும். இயற்கையிலேயே ஒருவருக்கு ஒரு நிறம் பிடிக்கும்போது, அந்த நிறத்துக்குரிய கிரகத்தின் ஆதிக்கம் அதிகமாக ஆழ்மனத்தில் இருக்கும் என்று அர்த்தம். இல்லாவிட்டால், அந்தக் கிரகத்தின் திசை நடக்கும் காலமாக இருக்கும். ஜாதகப்படி எந்தக் கிரகத்தின் நிலை நம்மை ஆதிக்கம் செலுத்துகிறதோ, அதற்குத் தகுந்த வண்ணங்களைத் தேர்வு செய்து பயன்படுத்துவதால் எமது மனத்தில் திருப்தியை உணரலாம். இந்த நிலையில் நாம் எடுத்துக்கொள்ளும் காரியங்களில் முனைப்புடன் செயல்பட்டு வெற்றி பெறலாம்!



# முதுமையில் ஆரோக்கியமாக வாழ...

முதுமை என்பது நோய் அல்ல. மழலைப் பருவம் விடலைப் பருவம் போல முதுமையும் ஒரு பருவம் தான். எனவே முதுமைப் பருவத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய பக்குவத்தை, முதுமைப் பருவத்தை நெருங்கும் ஒவ்வொருவரும் மனதளவில் பெற்றிருந்தால் முதுமையும் இனிக்கத்தான் செய்யும்.

வயது கூடக் கூட, உடல் உறுப்புக்களில் தோன்றும் மாற்றங்களும், அவற்றின் செயல் திறன்களில் ஏற்படும் மாறுபாடுகளும், தான் முதுமை என்று அழைக்கப்படுகிறது.

முதுமை அடையக் காரணங்கள்

முதுமைக்குரிய காரணங்களைக் கண்டறிய ஆராய்ச்சிகள் பல நடைபெற்று வருகின்றன. சிலர் சில காரணங்களைக் கூறுவார்கள் என்றாலும் முழுமையான காரணம் தெரியவில்லை.

நம் உடலிலுள்ள உயிர் அணுக்கள் பழுதடையும்போது அவற்றுக்குப் பதிலாகப் புதிய உயிர் அணுக்கள் தோன்றுகின்றன. புதிய அணுக்கள் உருவாகும் திறன், வயது ஆக ஆகக் குறைகிறது.

முதுமையில் அழிந்துபோகும் உயிர் அணுக்களுக்குப் பதிலாக சக்தியற்ற உயிர் அணுக்களே உருவாகின்றன. அதனால் செயல்திறன் குறைகிறது. உயிர் அணுக்கள் உருவாவதும், பெருகுவதும் விடாமல் உடலில் நடைபெறும் செயல்களாகும். அச்செயல்கள் முதுமையில் குறை



கின்றன. முதுமையில் கழிவுப் பொருள்கள் பல உடல் உயிர் அணுக்களுடன் சேர்ந்து விடுகின்றன. அதனால் அவற்றின் செயல்திறன் குறைகிறது.

**அழிவை உண்டாக்கும் இயக்குநீர்**

இந்த இயக்குநீர் மூளையில் உள்ள பிட்யூடரி எனும் நாளமில்லாச் சுரப்பியிலிருந்து சுரக்கிறது. இயக்குநீர் தைராய்டு எனும் சுரப்பியின் செயற்றிறனை வெகுவாகப் பாதிக்கிறது. இதனால் உடலில் உள்ள சக்தியும் இதயத்தின் வேலைத் திறனும் மாறுகின்றன.

எமது உடலில் உள்ள திசுக்கள் இயங்கும்பொழுது 'ப்ரீ ரேடிகல்ஸ்' என்னும் திரவம் வெளிப்படுகிறது. அதிகமாக வெளிப்படுவது பல நோய்கள் வரக் காரணமாகிறது. மேலும் இத்திரவம் முதுமையை விரைவில் அடையவும் வழிசெய்கிறது. இந்தத் திரவம் அதிகமாக வெளிப்படுவது மாரடைப்பு, நீரிழிவு, கண் புரை நோய் போன்ற நோய்கள் வரக் காரணமாகிறது. விற்றமின் ஈ, விற்றமின் சி, பீட்டா கரோட்டீன், செலினியம் உள்ள உணவுப் பொருள்களை உட்கொண்டால் உடலில் வெளிப்படும் 'ப்ரீ ரேடிகல்' திரவத்தின் அளவு குறைகிறது. இதனால் பலநோய்கள் குறைகின்றன. முதுமைக்காலம் நீடிக்கும்.

முதுமையில் வரும் பல நோய்களுள் மிகவும் தொல்லை தருவது மலச்சிக்கலாகும். முதியோர் தம் மலப்போக்கினை பற்றியே மிகவும் சிந்தனை செய்வர். மலச்சிக்கலை கவனியாமல் விட்டால், பல தொல்லைகள் உண்டாகும். மலம் சரிவர வெளியேறாமையால் மனதில் ஒரு வித சொல்லமுடியாத துன்பம், படபடப்பு உண்டாகும். கட்டிப்போன மலத்தால் குதத்தில் விரிசல் ஏற்பட்டு இரத்தக் கசிவுகளும் ஏற்படக் கூடும்.

**தீர்க்கும் வழிமுறைகள்:**

ஒரு நாளைக்கு 10 முதல் 15 குவளை (2-3லீற்றர்) தண்ணீர் குடிக்க வேண்டும்.

நாள்தோறும் சிறிது நேரமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

தேவையற்ற மாத்திரைகளை நிறுத்த வேண்டும். நார்ச்சத்து அதிகமுள்ள உணவுப் பொருள்களை மிகுதியாய் உண்ண வேண்டும். கேழ்வரகு, கோதுமை, தினை, வரகு, கொள்ளு முதலானவை நார்ச்சத்து மிகுதியாய் உள்ள உணவுப் பொருள்களாகும். கீரை, வாழைத்தண்டு, முட்டைக்கோஸ், புடலங்காய், பாகற்காய் முதலான காய்கறிகளிலும் நார்ச்சத்து மிகுதியாக உள்ளது. இவற்றைக் கடைப்பி

# முதுமைச் சிக்கல்களைத் தவிர்க்கும் வழிகள்

## ஹம்பாந்...

கொழும்பு, பெப்.24

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை கொழும்புடன் இணைக்கும் தெற்கு அதிவேகப் பாதையின் இறுதிக் கட்டுமானப் பகுதியான பாலட்டுவ தொடக்கம் பரவகும்புக்க வரையான அதிவேகப்பாதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ ஆகியோரினால் நேற்று மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

நேற்றுத் திறந்துவைக்கப்பட்ட, பாலட்டுவ தொடக்கம் பரவகும்புக்க வரையான அதிவேகப் பாதையின் நீளம் 58 கிலோமீற்றர்களாகும். இதற்காக 169 பில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.

அமைச்சர்களான சமல் ராஜபக் ஷ, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மற்றும் , நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக் ஷ, டி.வி.சாணக்க மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ந)

## கேதீச்சரத்தில்...

சந்தேக நபர்களை யாழ்ப்பாண நகரப் பகுதியில் வைத்து யாழ்ப்பாணப் பெரும் குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்றுக் கைது செய்தனர்.

சிவராத்திரி அன்று பக்தர்களின் கைத் தொலைபேசிகள் திருடப்பட்டதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பொலிஸார் சந்தேகத்தில் இருவரை யாழ்ப்பாண நகரப் பகுதியில் வைத்துக் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் திருட்டுடன் தொடர்புபட்ட விடயம் தெரிய வந்ததையடுத்து மன்னார் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 3 லட்சம் ரூபா பெறுமதியான 5 கைத் தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் ஒருவரை தாம் தேடி வருவதாகவும் அவரிடம் மேலும் பல திருடப்பட்ட கைத்தொலைபேசிகள் உள்ளன எனவும் யாழ். குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி றொகான் முனசிங்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வரணி மற்றும் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 39, 31 வயதுடைய குடும்பத் தலைவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பழக்கத்தால் அதிரித்துவரும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமையவும் யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் யாழ். குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி றொகான் முனசிங்க, உப பொலிஸ் பரிசோதகர் ஹார்ச சமரக்கோன் தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஒ -5)

## விலகுவதால்...

வதால் சர்வதேசத்துடன் கொண்டுள்ள நல்லுறவில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களிலிருந்து விலகுவதாக அரசு தீர்மானித்துள்ளமை புதிய விடயமல்ல. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு இதனையே தேர்தல் வாக்குறுதியாக வழங்கினார்.

நாட்டுக்கு எதிராகவுள்ள தீர்மானங்களில் இருந்து முழுமையாக விடுபடுவதாக அவர் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். ஆட்சிக்கு வந்தவுடன் இலங்கை தொடர்பான தீர்மானங்களில் இருந்து விலகும் நிலைப்பாட்டிலேயே இருந்தோம்.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்த பயணத்தடை முற்றிலும் ஒருதலைப்பட்சமானது. பயணத்தடை குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு அமெரிக்காவிடம் அறிவுறுத்தியுள்ளோம். இராணுவத் தளபதிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் எதுவும் இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை. ஆகவே, அமெரிக்காவின் செயற்பாடுகள் ஒருதலைப்பட்சமானவை என்பதை பகிரங்கமாக இராஜதந்திர மட்டத்தில் தெளிவுபடுத்தியுள்ளோம் என்றார். (ஒ-5-22)

## மாமனிதர்...

'மாமனிதர்'நடராஜா ரவிராஜின் மனைவி சசிகலா போட்டியிடவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அவர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கவுள்ளார் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் 14பேர் கொண்ட வேட்பாளர் நியமனக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் மனைவியைக் களமிறக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-5)

## விபத்தில்...

கந்தையா கோபாலப்பிள்ளை (வயது-61) என்பவரே இவ்வாறு சாவடைந்தவராவர்.

கடந்த 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியால் வாழைக்குலை கட்டிக்கொண்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். சந்தைப் பக்கமாக அவர் திரும்பிய வேளை எதிரே வந்த கப்ரக வாகனம் மோதியதில் மயக்கமடைந்த நிலையில், கோப்பாய் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். மரண விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேமகுமார் நேற்று மேற்கொண்டார். (ந-26)

## தமிழ் அரசு...

தமிழ் அரசுக் கட்சியின் நியமனக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு நேற்றுக் கூடியது. தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் டசின் கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றை இந்தக் குழு நேற்று ஆராய்ந்தது.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்கள், எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்றும் எஞ்சிய இடங்களுக்கே புதியவர்கள் களமிறக்கப் படவுள்ளனர்.

இதேவேளை, தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கோரியவர்களை நியமனக் குழுவில் உள்வாங்கப்பட்டமை தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதற்குப் பதிலளித்த கட்சித் தலைவர், இந்தக் குழு தொடர்பில் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கருத்துக் கோரப்பட்டதாகவும், அதனைப் பயன்படுத்தாமல் இருந்து விட்டு இது தொடர்பில் இப்போது பேசுவதில் பிரயோசனமில்லை என்று பதிலளித்துள்ளார். (ஒ-5-105)

## கோர விபத்து...

கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பேருந்துடன், யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கு நோக்கிப் பயணித்த டிப்பென்டர் வாகனம் நேற்று மாலை 6.15 மணியளவில் நேருக்கு நேர் மோதியது. டிப்பென்டர் வாகனம் முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றதாக தமது முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் ஊடாக உடனடியாக வவுனியா மருத்துவமனைக்கு ஏற்றி அனுப்பப்பட்டனர். அதேவேளை, விபத்துச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த சிலர் இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துக்குத் தீ வைத்தனர். பயணிகளுடன் உடமைகளுடன் பேருந்து கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. அந்தத் தீ, டிப்பென்டருக்கும் பரவியது.

வவுனியா நகர சபையின் தீயணைப்புப் படைக்கு தகவல் வழங்கப்பட்டது. அவர்கள் இரவு 7 மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்தனர். நீண்ட போராட்டத்தின் பின்னர், 7.30 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. பேருந்து தீயில் எரிந்து கொண்டிருந்த போது ஏ9 வீதியால் பயணித்தோர் அச்சத்துடன் சென்றனர்.

விபத்தில் உயிரிழந்த 4 பேரின் சடலங்களும் வவுனியா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. காயமடைந்த 23 பேரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள். உயிரிழந்தவர்கள் நேற்று இரவு வரையில் அடையாளம் காணப்படவில்லை. உயிரிழந்தவர்களில் பெண் ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

இதேவேளை, தீயில் கருகிய நிலையில், டிப்பென்டரில் பயணித்த இருவரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்களும் அடையாளம் காணப்படவில்லை. பேருந்துக்கு தீ வைத்த சந்தேகத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த இருவரை நேற்று இரவு பொலிஸார் கைது செய்தனர். (ஒ-5-105-110)

## சம்பந்தன்...

ளர் நியமனக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அது தொடர்பில் ஆராயப்படும் என்றும், அது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாது எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

**கொழும்பில் போட்டி**

கொழும்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி போட்டியிடுவதா இல்லையா என்பது தொடர்பில் வேட்பாளர் நியமனக் குழுவே இறுதி முடிவு எடுக்கும் என்று, கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஒ -5 -22 -105)





# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் நற்சிந்தனை அதிகரிக்கும். தன்னால் இயன்ற அளவுக்கு எல்லோருக்கும் உதவி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** மனதில் நம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி எளிதாக கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்

**மிதுனம்:** வெளிப்படையாக பேசுவதில் தயக்கம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் நன்மைதரும். அதிக உழைப்பால் மட்டுமே பணவரவு சீராகும்.

**கடகம்:** சிலநிகழ்வுகள் மனதில் பாதிப்பை ஏற்படுத்தலாம். தெய்வ நம்பிக்கையுடன் செயல்படுவதால் பணி எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும்.

**சிம்மம்:** எளிய அணுகுமுறையால் நல்லவரின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையின் வளர்ச்சி அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கன்னி:** உங்களின் நற்செயல்கள் நண்பர்களால் பாராட்டைப் பெறும். தொழில், வியாபாரம் செழித்து வளர தேவையான மாற்றத்தை செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். விரும்பிய உணவை உண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்:** காலத்தின் அருமையை உணர்ந்து பணியில் கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். நிலுவைத் தொகை கூடுதல் முயற்சியால் வசூலாகும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் வீண் பேச்சை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். முக்கிய செலவுக்கு பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** மனதில் இருந்த தயக்கம் விலகும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி புதிய இலக்கை எட்டும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மகரம்:** எதார்த்த பேச்சு பிறர் மனதை சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். சொத்தின் பேரில் கடன் பெறுபவர் நம்பகமானவரை நாடுவது நல்லது.

**கும்பம்:** மனசாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். உபரி பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** புதிதாக உருவாகிற பணியை தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரம் சராசரி அளவில் [illegible]ம். பணச்செலவில் சிக்கன[illegible]ற்றுவீர்கள்.

# ஊனம் என்ற பேச்சுக்கே இவ்வுலகில் இடமில்லை

## ஆஸ்திரேலியச் சிறுவனுக்கு பெருகுகின்றது பேராதரவு

சிட்னி, பெப். 24

ஆஸ்திரேலிய பெண் ஒருவர் குள்ளமான தனது 9 வயது மகன் அழுதுகொண்டே தனது வேதனையைக் கூறும் மனதை உருக்கும் வீடியோ ஒன்றை முகநூலில் பகிர்ந்தார். இதையடுத்து அந்தச் சிறுவனுக்குப் பெரும் ஆதரவு கிட்டியுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரைச் சேர்ந்த யாரகா பேல்ஸ் என்ற அந்தப் பெண் கடந்த புதன்கிழமை தனது 9 வயது மகன் குவாடனை பள்ளியில் இருந்து காரில் வீட்டுக்கு அழைத்து வந்துள்ளார். குள்ளமாக தோற்றமளிக்கும் அந்தச் சிறுவன் தனது பள்ளிச்சீருடையில் கார் இருக்கையில் சாய்ந்துகொண்டு கட்டுப்படுத்த முடியாமல் அழுகிறான்.



'எனக்கு ஒரு கயிறு கொடுங்கள் அம்மா. நான் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன். எனது இதயத்தில் கத்தியால் குத்திக்கொள்ள விரும்புகிறேன். என்னை யாராவது கொன்றுவிட வேண்டும் என விரும்புகிறேன்' என தனது தாயிடம் தேம்பித் தேம்பி அழுகிறான். அந்தச் சிறுவன் குள்ளமாக இருப்பதால் வகுப்பில் சக மாணவர்கள் அவனை ஏளனம் செய்தும் துன்புறுத்தியும் வந்துள்ளனர்.

இதுகுறித்து சிறுவனின் தாய் யாரகா பேல்ஸ் தனது பதிவில், குவாடனின் உயரத்தை கேலி செய்யும் வகையில் அவன் தலையில் ஒரு மாணவன் தட்டுவதை நானே நேரில் பார்த்தேன். நான் பள்ளியில் புகார் செய்து பிரச்சினை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காக காரில் ஓடிவந்து ஏறிய அவன், பிறகு தன்னை கட்டுப்படுத்த முடியாமல் அழத் தொடங்கிவிட்டான். ஒரு தாயாக எனது பொறுப்பிலிருந்து நான் தவறிவிட்டதாக கருதுகிறேன். நமது கல்வித் திட்டமும் தோல்வி அடைந்துவிட்டதாகவே கருதுகிறேன்- என்கிறார்.

மேலும் சக மாணவர்களை கேலி செய்வதால் எத்தகைய விளைவு ஏற்படும் என்பதை உங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுங்கள் என்று பிற பெற்றோர்கள் மற்றும் பள்ளிகளுக்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குவாடனின் வீடியோவை அவனது தாயார் பகிர்ந்து கொண்ட பிறகு அச்சிறுவனுக்கு ஆதரவு பெருகியது. 1 கோடியே 50 லட்சம் முறைக்கு மேல் இந்த வீடியோ பார்க்கப்பட்டுள்ளது. சிறுவனுக்கும் அவன் தாயாருக்கும் ஆஸ்திரேலிய தேசிய ரக்பி லீக் உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆஸ்திரேலிய ரக்பி அணி தேசிய ஆட்டமொன்றில் அந்தச் சிறுவனையும் மைதானத்துக்கு அழைத்துச் சென்று கௌரவப்படுத்தியுள்ளது. (ம)

# ஆப்கனில் போர்நிறுத்தம் மக்கள் கொண்டாட்டம்!

காபூல், பெப். 24

ஆப்கானிஸ்தானில் ஒரு வாரகாலம் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த நாட்டு மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



ஆப்கானிஸ்தானில் 2001ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. உள்நாட்டு படைகளுடனும், அவற்றுக்கு ஆதரவாக உள்ள அமெரிக்கப் படைகளுடனும் மோதிவருகின்ற தலிபன்களுடன் இந்த மாதம் 29ஆம் திகதி ஒப்பந்தம் செய்து கொள்ள அமெரிக்கா தயாராகி வருகிறது.

இந்த நிலையில் ஆப்கனிஸ்தானில் ஒரு வாரகால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு அது நேற்று நடைமுறைக்கு வந்தது. இது உள்நாட்டு மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. குண்டு வெடிப்புகளாலும், துப்பாக்கிச் சண்டைகளாலும் அவதியுற்று வந்த மக்களுக்கு போர் நிறுத்தம் பெருத்த நிம்மதியை அளித்துள்ளது. அவர்கள் தெருக்களில் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். (ம)

# சீனாவில் கொரோனா உக்கிரம் உயிரிழப்பு எண்ணிக்கை 2,500



பீஜிங், பெப். 24
சீனாவில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 2 ஆயிரத்து 500ஆக அதிகரித்துள்ளது. சீனாவின் வுகான் மாகாணத்தில் கடந்த டிசெம்பர் மாதம் பரவிய கொரோனா வைரஸ் நாளுக்குநாள் வலுவாகப் பரவி வருகின்றது. நேற்று முன்தினம் மேலும் 120 பேர் உயிரிழந்ததை அடுத்து ஒட்டுமொத்த இறப்பு எண்ணிக்கை 2,500ஆக அதிகரித்தது.
சுமார் 14 ஆயிரம் பேரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளது. இதைவிட சுமார் 85 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமட்டும் சுமார் 2 ஆயிரம் நோயாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டனர். (ம)



பிரேசிலில் கார்னிவேல் கொண்டாட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அந்த நாட்டின் பெரும் வர்த்தக நகரான ரியோ டி ஜெனிரோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொண்டாட்டத்தின் ஒளிப்படமே இது. (ம)

# 120 பயங்கரவாதிகள் நைஜரில் படுகொலை

நைஜர், பெப். 24
ஆபிரிக்க நாடான நைஜரில், 2015ஆம் ஆண்டு முதல் மத அடிப்படையிலான பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் அவ்வப்போது பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தி, பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர்.
இந்த நிலையில் அந்த நாட்டின் தென்மேற்கு பகுதியில், மாலிபுர்கினோ பாசோ நாடுகளின் எல்லைக்குஅருகே பதுங்கி இருந்த பயங்கரவாதிகள்ள குறிவைத்து நைஜீரியா மற்றும் பிரான்ஸ் படைகள் அதிரடி தாக்குதல்கள் நடத்தின. இந்த தாக்குதல்களில் 120 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். இதை நைஜர் நாட்டின் ராணுவம் உறுதி செய்துள்ளது. (ம)

## 14ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 06.01.1950 — இறப்பு 28.02.2006

### நாகேஸ்வரன் கனகீஸ்வரி (கிளி)

திதி: பூர்வபட்ச பிரதமை
24.02.2020 திங்கட்கிழமை
14 ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தனை செய்கின்றோம்.

கணவர் - நாகேஸ்வரன்,
மகன் - விமல்ராஜ் (ராயூ),
மருமகள் - கவிவிஜியா,
பேரப்பிள்ளைகள் - பானுஜா, கஜலக்ஷி.

* தட்டாதெருச் சந்தி,
8/6, அரசடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

(ஏ.21956) (13,17)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும்

பிறப்பு 21 . 03 . 1939



இறப்பு 25 . 01 . 2020

### அமரர் இளையதம்பி யோகராசா

கடந்த 25.01.2020 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.02.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்குப் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்து அனுதாபத்தைத் தெரிவித்த அனைவருக்கும். பதாகைகள் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டும். மலர்வளையங்கள் சாத்தியும் தமது அனுதாபங்களைத் செலுத்திய நல் உள்ளங்களுக்கும் எமக்குப் பலவழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**


மீசாலை வடக்கு,
மீசாலை.

மருமகன் – பாலச்சந்திரன் (சந்தனா)
மகள் – பிறேமகலா (நிதி)
077 668 5051

(AC.555)(11,17)

## விழிநீர் அஞ்சலி

தோற்றம் 06 . 06 . 1946



மறைவு 22 . 02 . 2020

### குழந்தைவேலு கிருஸ்ணசாமி

(இரசாயன கூட்டுத்தாபன இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர், பரந்தன்)

ஞானிமடம் பூநகரியைப் பிறப்பிடமாகவும் விவேகானந்தநகர் கிளிநொச்சியை வதிவிடமாக வும் கொண்டவரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் முகாமைக்குழு உறுப்பினரும் இல்லத்தின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றி வந்தவருமான குழந்தைவேலு கிருஸ்ணசாமி அவர்கள் மரணமடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைகின்றோம்.

மானிடராய்ப் பிறந்தார்க்கு
மண்ணில் இறப்புண்டானாலும்
நெஞ்சில் ஈரமுள்ளார்– நம்
மனதில் குடியிருப்பார்
வாழ்வினில் இன்னல்களைக் கண்டும் துவளாது
வாழ்வதனை வாழ்ந்து காட்டிய அன்னையே
வாழ்வு நிலையானதல்ல ஆகையால் – உம் ஆத்மா
இறைவன் மலரடி சேர இறைஞ்சுகின்றோம்.


அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(IN/12660)(11,17)

தலைவர் பொன்.நித்தியானந்தம், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

### சென். பற்றிக்ஸ் கல்லூரி – யாழ்ப்பாணக் கல்லூரி

# பொன் அணிகளின் போர் வெள்ளியன்று ஆரம்பம்!



யாழ்ப்பாணக் கல்லூரி



சென். பற்றிக்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம், பெப். 24

பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடர் நீண்ட இடைவெளியின் பின்னர் எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் 1917ஆம் ஆண்டிலிருந்து இந்தத் துடுப்பாட்டப் போட்டி நடைபெற்று வருகின்றது.

போர்க் காலங்களைத் தவிர மற்றைய காலங்களில் ஒழுங்காக நடைபெற்றுவந்தவேளை 2014ஆம் ஆண்டு போட்டியின் போது இடம்பெற்ற அசம்பாவிதம் காரணமாக 2014ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டுவரை போட்டிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டிமட்டும் நடைபெற்றது.

இந்த வருடம் 103ஆவது வருட பொன் அணிகளின் போரும் 28ஆவது தடவையாக ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டமும் (மார்ச் 7), ரி20 ஆட்டமும் (மார்ச் 9) நடைபெறவுள்ளன.

இதுவரைகாலமும் நடைபெற்ற போட்டிகளில் இரு நாள் போட்டியில் (பொன் அணிகளின் போர்) சென் பற்றிக்ஸ் கல்லூரி 32 தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 16 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன.

இந்த வருடம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு பிலிப் ஜவன் றொசாந்தனும் யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எம்.சிந்துஜனும் தலைமை தாங்குகின்றனர். (ம)



## கொக்குவில் இந்து அரையிறுதிக்குள்!

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவினருக்கான கடினப்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஸ்கந்தா அணி முதல் இன்னிங்ஸில் 55 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. ஸ்ரிபன் அதிகபட்சமாக 17 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சதூர்சன் 4 இலக்குகளையும், அனோசன், வினோசன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு முதல் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. இதை யடுத்து அந்த அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)



## கரவைச்சுடர் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 24

வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

வல்வை தீருவில் இளைஞர் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. ஆட்டநாயகனாக கரவைச்சுடர் அணியின் றொபின்சன் தெரிவானார். (மு-23)

## சாவகச்சேரி மகளிர் துடுப்பாட்ட சம்பியன்

சாவகச்சேரி, பெப். 23

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட வலய நிலைமட்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது.

இறுதியாட்டத்தில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணியும் நாவற்குழி மகா வித்தியாலய அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகளிர் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி இலக்குகள் இழப்பின்றி 116 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனைகளான பா.தர்மிகா 9 சிக்ஸர்கள் நான்கு பவுண்டரிகள் உட்பட 86 ஓட்டங்களையும் மேரி செமில்டா 30 ஓட்டங்களையும் அதிரடியாக ஆடிப் பெற்றனர்.

117 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நாவற்குழி மகா வித்தியாலய அணி 76 ஓட்டங்களைப் பெற்றதால் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி இவ்வருடச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ம-9)

## ஜடேயாவைப் பின்பற்றும் அகர்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 போட்டியில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்திய ஆஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் ஆஸ்டன் அகர், ரவிந்திர ஜடேஜாவுக்குப் புகழாராம் சூட்டியுள்ளார். ஆட்ட நாயகன் விருது பெற்ற ஆஸ்டன் ஆகர் தனது பந்துவீச்சு குறித்துக் கூறுகையில், 'எனக்கு கிரிக்கெட்டில் பிடித்த வீரர் இந்திய அணியின் அல்ரவுண்டர் ராக் ஸ்டார் ரவிந்திர ஜடேயாதான். சுழற்பந்துவீச்சு குறித்து அவரிடம் ஏராளமான ஆலோசனைகளைக் கேட்டேன் - என்றார். (ம)



# ‘உதயன்’ கிண்ண உதைபந்து மெசியா அணி சம்பியனானது

பூநகரி, பெப். 24

பூநகரி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இளந்தளிர் விளையாட்டுக்கழகம் , உதயன்சஞ்சீவி நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் நடத்திய, உதயன் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத்தொடரில் வலைப்பாடு மெசியாவிளையாட்டுக் கழக அணி சம்பியனானது.











நேற்று ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்குடா இளந்தளிர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதற் பாதியாட்டத்தில் வலைப்பாடு மெசியா அணி வீரர் டட்லி ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் கோலினைப் பதிவு செய்தார்.

பதிலுக்கு பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் சாஜகான் ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான கோலினை பதிவு செய்தார். தொடர்ந்து வலைப்பாடு மெசியா அணி வீரர் பிரசாந் ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான . இரண்டாவது கோலினை பதிவு செய்தார். அத்துடன் முதற் பாதி ஆட்டம் நிறைவுக்கு வர வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்ட முடிவில் இரண்டு அணியினரும் எந்த வித கோல்களையும் பதிவு செய்யாமையால், ஆட்ட நேர முடிவில் 2:1 கோல் கணக்கில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.


ஆட்டநாயகனாக ஜொலி போய்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் ஷாஜகானும், தொடர் ஆட்டநாயகனாக வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி வீரார் சஜீவனும், சிறந்த கோல்காப்பாளராக வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி கோல்காப்பாளர் ஜெறிலினும் தெரிவாகினர்.

சிறந்த பின்களவீரராக வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி வீரர் றென்சோ தெரிவானார். வெற்றிக்கிண்ணத்தை உதயன் நிர்வாக இயக்குநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனின் பாரியார் திருமதி.யசோதை சரவணபவன், வலைப்பாடு மெசியா அணிக்கு வழங்கினார்.

(ந-23)

# இந்தியாவுக்கு எதிராக நியூசிலாந்து வலுநிலை

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியை வீழ்த்துமளவுக்கு வலுப் பெற்றுள்ளது நியூசிலாந்து அணி.



நியூசிலாந்தின் வெலிங்டனில் கடந்த வெள்ளிக் கிழமை இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி வெறும் 165 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. ரகானே 46 ஓட்டங்களையும், அகர்வால் 34 ஓட்டங்களையும், சமி 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சவுத்தி, ஜெமிசன் இருவரும் தலா 4 இலக்குகளையும், போல்ட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தினம் இரண்டாவது நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது. வற்லிங் 14 ஓட்டங்களுடனும், கிராண்ட்ஹோம் 14 ஓட்டங்களுடனும் நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினார்கள். நியூசிலாந்து அணி 348 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸுக்காகப் பெற்றிருந்தபோது அனைத்து இலக்குகளையும் இழந்தது. வில்லியம்சன் அதிகபட்சமாக 89 ஓட்டங்களைப் பெற்றார். அவரைவிட ஜெமிசன் 44 ஓட்டங்களையும், ரெய்லர் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இசாந் சர்மா 5 இலக்குகளையும், அஸ்வின் 3 இலக்குகளையும், பும்ரா, சமி இருவரும் தலா ஓர் இலக்கையும் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இந்திய அணி நேற்றைய மூன்றாம்நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அகர்வால் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரகானே 25 ஓட்டங்களுடனும், விஹாரி 15 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்திய அணி இதுவரையில் 39 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 24

**கால்பந்தாட்டம்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.பி.சி பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வரு கின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து யாழ். ஐக்கியம் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். போதனா மருத்துவமனை அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழகத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடர் அந்தக் கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை கில்லாடிஸ் 100 விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து நொதன் ஸ்ரைகர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜப்னா றோயல்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை புளூஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குடும்பம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

**விமான சேவை**
யாழ்ப்பாணம் ⇆ கொழும்பு
திங்கள். புதன். சனிக்கிழமைகளில்
பதிவுகளுக்கு
**கரிகணன்**
வடக்கின் அச்சகதாரர்
One way Ticket 7,500/-
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036
077 0111 028 | 029

**வாடகைக்கு**
யாழ்ப்பாணம் பிரப்பம்குளம் வீதியில் அமைந்த வீட்டின் ஒருபகுதி சிறு குடும்பத்துக்கும், ஒரு அறை தளபாடங்களுடன் வேலை செய்யும் அல்லது படிக்கும் பெண்களுக்கும் வாடகைக்குண்டு.
077 034 7277, 075 705 2686

# இமையாணன் மகளிர் அணி எல்லேயில் சம்பியன் ஆனது!



கரணவாய், பெப். 24
பெண்களுக்கான எல்லே போட்டியில் பிரதேச சம்பியனாகியது இமையாணன் மத்தியின் மகளிர் அணி.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான எல்லே தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் சோழங்கன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 30 பந்துகளைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சோழங்கன் விளையாட்டுக் கழகம் ஓட்டம் எதனையும் பெறவில்லை.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இமையாணன் மத்தியின் மகளிர் அணி 10ஆவது பந்தில் வெற்றிபெற்றது. (ம-108)

## மரண அறிவித்தல்

### திருமதி நாளினி ரவீந்திரன்

(ஓய்வுநிலை ஆசிரியர் யா/ புனித பத்திரிசியார் கல்லூரி)



இல. 07. அச்சக வீதி. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாளினி ரவீந்திரன் நேற்று முன்தினம் (22.02.2020) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான F.C வேதநாயகம் அன்ரனற் றோஸ்மலர் தம்பதியரின் பாசமிகு மகளும். காலஞ்சென்ற M. அன்ரனிப்பிள்ளை மற்றும் பிலோமினா தம்பதியரின் பாசமிகு மருமகளும். ஜூலியன் ரவீந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ திருக்குடும்ப கன்னியர்மடம். தேசிய பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும். றொஷி. ஜெறி. டாறிக்கா ஆகியோரின் அன்புத் தாயும். அர்ச்சுதனின் பாசமிகு மாமியும். நிஷேலின் பாசமிகு அம்மம்மாவும். றெறன்ஸ் (France) றோகினி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.02.2020) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs.31468) (13.17)

இல.7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 706 2753

தகவல்:
குடும்பத்தினர்

**Spoken English, சிங்களம் With Grammar**
அடிப்படையிலிருந்து எழுத, வாசிக்க, பேச்சுப் பயிற்சியுடன்
◆ ஆங்கிலம் - 3 - 6 மாதம் ◆ சிங்களம் 2 - 3 மாதம்
◆ வேலைக்கு. வெளிநாடு. உயர்கல்விக்கு செல்வோருக்கு
◆ சிறு குழுவாயின் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
யாழ்நகர் · அச்சுவேலி · புத்தூர் · நெல்லியடி · சாவகச்சேரி
lect by -SKB - மனோகரன்- 077 725 4627

## மரண அறிவித்தல்

# தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம்

அலவத்தை, அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம் நேற்று (23.02.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும். சிவகனகாம்பிகையின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற திருநாவுக்கரசு (முன்னாள் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர்) மற்றும் சபாரத்தினம் (சோமு - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். கலைமகள். செல்வராணி ஆகியோரின் மைத்துனனும். உமா (லண்டன்). முரளி (லண்டன்). ஆதவன் (J.P - ஆசிரியர் - யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை. வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர்). உஷா (கொழும்பு). கீதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும். சந்திரகுமார் (லண்டன்). கஜேந்தினி (லண்டன்). சிவசாம்பவி (முகாமைத்துவ உதவியாளர் - சண்டிலிப்பாய்). பிரபாகரன் (கொழும்பு). ஜெயகஜன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும். சாம்பவி. சரன். ஹரிஸ்மிதா. சயானா. சிருஸ்டிகன். அட்சரன். ஜஷ்வினி. ஆருஷா. அபிநிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம். இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அலவத்தை,**
**அளவெட்டி மத்தி,**
**அளவெட்டி.**

**தகவல்:**
**மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



**தொடர்புகளுக்கு:**
சபாரத்தினம் (U.K- 0044 2082 045 062)
சசி (U.K- 0044 7470 361 362)
முரளி (U.K- 0044 7931 312 372)
ஆதவன் (Jaffna - 077 720 4405)
சிவசாம்பவி (Jaffna - 076 697 4422)

(cs.31446) (13.17)

அன்னையின் மடியில் 30.06.1936
இறைவனடியில் 23.02.2020

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பல்ல மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113
**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.